12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organபுe; of D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2010 18-2-1979 | இதழ் 22



உன் கடமையும் தொடருமென நம்புகிறேன்!

உடன்பிறப்பே,

'நம்நாடு' வார இதழை மீண்டும் தொடங்கி நமது கழகப் பாசறைகளின் கேடயமாகத் திகழச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் தலைமைக் கழக அலுவலகச் செயலாளர்களில் ஒருவரான முன்னாள் மேயர் கணேசன் அயராது பாடுபட்டு வருகிறார். நாளேடுகள் மலிந்து நாட்டுச் செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்கிற வாய்ப்பைப் பெற்றிடும் இந்நாளில் வார ஏடுகள் எண்ணிக்கையில் உயர்வது என்பது எளிதான காரியமல்ல! அதுவும் ஒரு இயக்கத்தின் கொள்கைகளைக் கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும் தாங்கி வருகிற வார இதழ்கள், இலட்சக்கணக்கான பிரதிகள் என்ற எண்ணிக்கையை எட்டுவது கடினம், இதையெல்லாம் மனத்திற்கொண்டே 'நம்நாடு' கிழமை இதழை மீண்டும் தொடங்கிவிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அக்கறையுடன் இந்த இதழுக்குக் கட்டுரைகள், கதைகள், கவிதைகள் எழுதியனுப்பும் கழக எழுத்தாளர்களுடன் இணைந்து நானும்வாரந்தோறும் எழுதி வருகிறேன்.

என் நிலையோ நீ அறியாதது அல்ல! மாவட்டங்களில் கழக வளர்ச்சி நிதி திரட்டுவதற்காக சுற்றுப் பயணங்கள். சென்னையில் இருக்கும் நேரத்திலும் ஓயாத கழகப் பணிகள் — முரசொலியில் கடிதங்கள் மூலம் நாள்தோறும் தொடர்புகொள்ள வேண்டிய எழுத்துத் தொண்டு, குங்குமத்தில் குறளோவியம், தொடர்கதை — அஃதன்னியில் நீ விரும்புகிறவாறு மூன்று நான்கு திரைப்படங்களுக்கு எழுதுகிற வேலை வேறு — இத்தனைக்குமிடையில் 'நம்நாட்டு'க்கும் எழுதி வருகிறேன்.

ஓரிரு வாரம் 'குறளோவியம்' குங்குமம் இதழில் தடைப்படுவது போல— நம்நாடு இதழிலும் 'புனித ராஜ்யம் நாடகம் தடைப்பட்டு விடுகிறது. ஓய்வின்றி அமைந்துவிடுகிற கட்சிப் பணிகளே அதற்குக் காரணம்.

நட்டத்தில் நடைபெறவில்லையென்றாலும், 'நம்நாடு' இலாபத்தில் இயங்கவில்லை என்பது என் மனத்துக்குப் பெருங்குறைதான்!

மாதந்தோறும் கிடைக்கும் சிறு இலாபம், கழகத்தை நடத்துவதற்கு ஓரளவு பயன்படுமல்லவா; அதனால்தான்!

இலாப நோக்கு —கழகத்தைப் பொறுத்து ஓரளவு இருந்தாலும்; நமது கிளைக் கழகங்கள், சார்பு மன்றங்கள் ஒவ்வொன்றிலும் நம்நாடு இதழ் ஒன்று வாரந்தோறும் நிச்சயம் வாங்கப்பட வேண்டும் என்பதிலே எனக்கு அழுத்தமான கருத்து உண்டு!

அந்த ஆசை முழுமையாக நிறைவேறவில்லை! நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உன்னுடையது!

எல்லாப்பக்கங்களிலும் என் எழுத்துக்களே இருந்திட வேண்டும் என நீ எதிர்பார்ப்பது சரியல்ல!

கழகத்துக்குப் புதிய எழுத்தாளர்களும் — சிந்தனையாற்றல் படைத்தவர்களும் தேவை! அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அந்தப் பணியை 'நம்நாடு

செய்து வருகிறது.

காலத்துக்கேற்ப — 'நம்நாடு' தனது பழமைக் கோலம் கலைத்து புதிய நடை போடவேண்டும். விறுவிறுப்புடன் என்ற உனது கருத்தை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன்.

இன்னும் இரண்டொரு வாரங்களில் எழிற்கோலம்கொண்டு — எண்ணக் கருவூலமாய் 'நம்நாடு' உன் கரங்களை அலங்கரித்துக் கருத்தைக் கிளறும் வண்ணம் வரப்போகிறது பார்!

இடையே இரண்டு வாரங்கள் நின்றுவிட்ட "புனிதராஜ்யம்" தொடர் நாடகத்தை அடுத்த இதழிலிருந்து எழுதப் போகிறேன்.

தொய்வின்றி எழுதப் போகிறேன். இன்றுள்ள நாட்டு நிலையைப் படம் பிடித்துக் காட்டும் அந்த நாடகத்தை நீ சுவைத்துப் படித்து — பாராட்டி எழுதியுள்ள கடிதங்கள் எனக்கு மகிழ்ச்சியூட்டுகின்றன!

"ஏன் இரண்டு வாரமாக அந்த நாடகத்தைக் காணவில்லை?" என்று நீ கடிந்துகொண்டு எழுதிய கடிதங்களையும் கண்ணிலே ஒத்திக்கொண்டேன்; உன் ஆர்வத்தை எண்ணி ஆனந்தமுடன்!

அடுத்த வாரம் 25-2-79 அன்று நம் நாடு இதழில் "புனித ராஜ்யம்" நாடகம் தொடரும்!

வாரந்தோறும் "நம் நாடு' ஒன்றையும் வாங்கித் தீரவேண்டுமென்ற உன் கடமையும் தொடருமென நம்புகிறேன்.

கலைஞரின் குரலில்

குடியரசுத் தலைவர்!

உலக அரங்கில் இந்திப் பெண்ணுக்கு மையிட்டு பலர் சூட்டி, பாதங்களற்ற அந்தப் பெண்ணை பரத நாட்டியம் ஆடவைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் இந்திய வெளி விவகார அமைச்சர் வாஜ்பாய்! தொண்ணூருக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்களில் இந்திப் பெண்ணின் புன்சிரிப்பு அலை வீச்சுக்கள் பரவிப் பரவச மூட்டிக் கொண்டிருக்கின்றன என்ற பச்சைப் புளுகைப் பறைசாற்றியிருக்கிறார் அந்த மத்திய அமைச்சர். அத்தோடு விடவில்லை; உலகப் பல கணியில் இந்தியைப் பெருமைப் படுத்துவோம் என்ற வெறிபிடித்த உணர்ச்சியுடன் வார்த்தைகளையும் உதிர்த்திருக்கிறார்.

இந்தி படிக்காதவர்கள், ஏற்காதவர்கள் தேசப்பற்றின் விரோதிகள்' என்று இங்கு வந்து பிரதமர் மொரார்ஜி தேசாய் கூறிவிட்டுப்போனார். அதனைத் தொடுத்து இனமான உணர்வுகள் அலைவீசிடும் தமிழ்ச் சமுதாயத்தின் எழுச்சிக் குரலை உணர்ந்து கொள்ளாத வாஜ்பாய் இந்தி ஆதிக்கத்தினை நிலைநாட்டியே தீருவோம் என்று பரணிபாடுகிற விதத்தில், இந்திய ஒற்றுமையினைத் தூளாக்கிடும் வகையில் முழங்கியிருக்கிறார்

தொடர்ச்சியான இந்தி எதிர்ப்பு வரலாற்றின் இறுதிக் கட்டத்தில். இந்திய மாநிலங்களனைத்திலும் இந்தி ஆதிக்கத்தினைத் தகர்த்திடும் போரில் திராவிட முன்னேற்றக் கழகம் நிற்கிறது. இந்தி ஆதிக்க எதிர்ப்பின் தலைமைப் போராட்ட வீரராகத்தலைவர் கலைஞர் நிமிர்ந்து நிற்கிறார்.

ஜனவரி 26 ல் தமிழகத்தில் இந்தி ஏகாதிபத்தியத்திற்கெதிராக ஒரு கருங்கடலையே பெருக்கெடுக்கச் செய்து ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடிவந்த கோழையுள்ள நாடுஇதுவல்லவே' என்று இளம் பருவத்திலேயேபோர்க் குரல் எழுப்பிய தலைமகன் கலைஞரின் பரணிப் பாடல் இமயத்தின் முடி முதல் குமரியின் அடிவரை ஒளிக்கத் தொடங்கி விட்டது.

இந்தியை வலுக்கட்டாய அழகியாக்கிடும் வீண் வேலையில் இறங்கியுள்ள வாஜ்பாய் இந்தியாவின் ஒற்றுமைக்குக் கேள்விக் குறிகளை நிற்க வைக்கிறார்.

இந்திய நாட்டின் முதல் குடிமகன், குடியரசுத் தலைவர் திருமிகு சஞ்சீவிரெட்டி அவர்களை, இந்தச் சூறாவளிச் சூழல்கள் திகைக்க வைக்கின்றன. உயர்ந்த நாற்காலியிலே அவர் உட்கார்ந்திருந்தாலும் உள்ளத்தைத் திறந்துகாட்டாமல் அவரால் இருக்க முடியவில்லை; எழுந்திருக்கிற அபாய அறிவிப்பினைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. முடிவு?

மனம் திறந்து பேசிவிட்டார்!

கலைஞரின் குரலை எதிரொலிக்கிறார்!

டெல்லியில் மோதிலால் நேரு புதிய கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு மனம் வெதும்பி உரை நிகழ்த்தியிருக்கிறார்!

இதயத்திலே கனன்று கொண்டிருக்கும் தாய்மொழியுணர்வை இந்தி வெறியர்களுக்கு மத்தியில் தைரியமாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறார். தெற்கில் மட்டும் வீசிக் கொண்டிருக்கும் சாதாரண புயல் என்று அலட்சியப்படுத்தப்பட்ட 'இந்தி ஆதிக்க எதிர்ப்பு'க்கு இன்று குடியரசுத் தலைவரே வழிமொழிதலியிருக்கிறது. இந்தி வெறியர்களை பகிரங்கமாகக் கண்டித்திருக்கிறார். இந்தி ஆதிக்கம் இந்தியாவின் ஒற்றுமைக்குப் பேராபத்தை விளைவிக்கும் என்று எச்சரித்திருக்கிறார்.

இந்தி எதிர்ப்புப் போரின் மையப்புள்ளியை இன்று நாடு உற்றுக் கவனிக்கத்தொடங்கிவிட்டது

மாண்புமிகு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் இன்று இந்தியக் குடியரசின் தலைமகன். ஆகவே அவரது வாசகங்கள் சராசரிப் பார்வைக்குட்பட்டவை அல்ல.

அடிக்கல் நாட்டியதும் தனது தாய்மொழியான தெலுங்கில் பேசத் தொடங்கி பின்னர் அவையில்சல சலப்பும் பரபரப்பும்ஏற்பட, சிறிதுநேரம் கழித்து ஆங்கிலத்தில் பேசினார்.

இந்தி ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட நினைப்போருக்கு அதிரடி கொடுத்திருக்கிறார்!

"என் தாய்மொழியான தெலுங்கை நான் நேசிக்கிறேன். ஆகையினால்தான் தெலுங்கில் பேசத் தொடங்கினேன். அதைத் தவறு என்று யாரும் சொல்ல முடியாது

ஆனால் மொழியைவிட என் நாட்டை அதிகமாக நேசிக்கிறேன். மொழிவெறி நாட்டின்வளர்ச்சியைபாதிக்க அனுமதிக்கக்கூடாது.

மொழிவெறியும் சாதி வெறியும் நம்முன் உள்ள இரு பெரிய அபாயங்கள்.

கல்லூரி முதல்வர் பேசும் போதுகல்லூரிச் சாதனைகளைக் கூறினார். அவர் இந்தியில்பேசினார். ஒருவர் பேசுவது மற்றவர்களுக்குப் புரியவேண்டும். முதல்வர் தமது திருப்திக்காக மற்றவர்களுக்குப் புரியாவிட்டாலும் பரவாயில்லை என்று இந்தியில் பேசுவது பொருத்தமானதா?

இதேநிலை நீடித்தால் அனைவருமே சின்ன புத்தியுடையவர்களாக ஆகிவிடுவோம் என்று அஞ்சுகிறேன்.

அண்மையில் மிசோரம் மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது மாணவர்கள் கறுப்புக்கொடி காட்டினார்கள் அகில இந்திய போட்டி பரீட்சைகளைத் தங்களது மிசோ, மொழியில் எழுத வசதியில்லை என்பதற்காக அவர்கள் போராட்டம் நடத்தினார்கள்

பலமொழிகளும் கலாச்சாரங்களும் அடங்கியது இந்தியா. ஆனால் வேறு சில புத்தி காரணமாக நாடு துண்டுதுண்டாக உடையநேர்ந்தால் அது பரிதாபத்திற்குரியது.

என்னைப் பொறுத்தவரை மொழி ஒரு பிரச்சினையே இல்லை. நான் மொழி வெறியனும் அல்ல, சபாநாயகராக இருந்தபோது உறுப்பினர்கள் இந்தியில் பேசுவதைக் கவனித்திருக்கிறேன். இந்தி நாவல்கள்கூடப் படித்திருக்கிறேன்.

நான் அரசியலுக்கு வந்த போது, பெரிய தலைவர்கள் இருந்தார்கள். நாடு சுதந்திரம் அடைவது ஒன்றுதான் அப்போது அவசியமாக இருந்தது. சில்லறைச் சண்டைகளை யாரும் பொருட்படுத்தவில்லை. அப்போது தூசியில் இருந்து மனிதர்களை உருவாக்கினார் மகாத்மா காந்தி. அந்தத் தூசியில் உருவானவன் நான்

மேலும் பலவிஷயங்களைப் பேச விரும்புகிறேன். ஆனால் ஜனாதிபதி பதவி கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது. ஆகவே மனதில் பட்டதை எல்லாம் பேச முடியவில்லை. இளைஞர்கள் மொழி அடிப்படையில் பிளவுபட்டால் அது நாட்டிற்கு அழிவைத் தேடிதரும்''

—மேலே கண்டவை குடியரசுத் தலைவரின் மனம் திறந்த எச்சரிக்கை!

பாராளுமன்றத்தில் பக்கத்திலே உட்கார்ந்திருக்கும் கடின இதயங்களைக் குடியரசுத் தலைவரின் எச்சரிக்கை, தட்டிப் பார்க்க வேண்டும்.

இந்திய சரித்திரத்தில் தெற்கின் குரலுக்கு வலிமையுண்டு; அதற்குச் சான்றுகளும் உண்டு.

இந்தி ஆதிக்கத்தினைத் தகர்த்திடும் படைத் தலைவர் கலைஞரின் குரலை குடியரசுத் தலைவரின் உரையில் காண்கிறோம்!

இந்த முழக்கம் ஆள்வோரின் கவனங்களைச் செம்மைபடுத்த வேண்டும்! இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரினை அடக்கநினைக்கும் சிறுபிள்ளைத் தனத்தை மாட்சிமை தங்கிய பெரிய மனிதர்கள் கைவிட வேண்டும்.

காட்டிவிட்டார். விழாவில் அவருக்கு முன் பேசியடெல்லி நிர்வாக சபைத் தலைவர் கேதாரிநாத்சுகானி, பல்கலைக் கழகத் துணைவேந்தர், கல்லூரி முதல்வர் ஏனைய அனைவருமே இந்தியிலேயே பேசியிருக்கிறார்கள்.

குடியரசுத்தலைவரின் தென்னிந்திய இதயம் துடிதுடிப்போடு ஆத்திரத்தை திரப்பி

ச. அமுதன் பி. ஏ.

மதிப்புரை:

கலைஞர் கண்ட வள்ளுவர் கோட்டப் பதிகம்

தமிழிலும் ஆங்கிலத்திலும் அருங்கவிதைகள் படைத்துவரும் நம் கழகத்துக் கவிஞரான முருகுவண்ணன், கலைஞர்கண்ட வள்ளுவர் கோட்டப் பதிகம் என்னும் புதியதோர் இலக்கியத்தைப் படைத்துள்ளார்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளை வழங்கிய வள்ளுவருக்கு இந்த நூற்றாண்டில் உலகம் கண்டு வியக்கும் வகையில் கோட்டம் கண்டார் கலைஞர். அந்தக் கலைஞருக்கு ஓர் 'பதிகம்' பாடி வழங்கியுள்ளார் கவிஞர் முருகுவண்ணன்.

பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது. இந்தப் பதிகத்தில் உள்ள ஒவ்வொரு பாட்டும ஒரு முத்தாக உள்ளது. பத்துப் 'பா முத்துக்கள் பதிக்கப்பட்ட புகழ் மாலையைக் கலைஞருக்குச் சூட்டி மகிழ்கிறார் கவிஞர்

திருக்குறளை தந்த நிதி
முகநுணைநிதி நெஞ்சில்
குறளாட்சித்
தேரோட்டமே!
திருக்குறள் வடம் வண்ண
சிந்தைஒலி ஒளிக்காட்சி
வள்ளுவர்
திருக்கோட்டமே!

ஃ ஃ ஃ

'காஞ்சி நகரில்
வள்ளுவனே அண்ணாவாய்
மற்றொருதாய்
வயிற்றினிலே
மீண்டும் வந்துதித்து
நம்முன்
ஆட்சி-தமிழ்
ஆட்சி-அருள்
ஆட்சிபுரிந்தார் அண்ணா
அமறை
பொருள்விளங்க
அண்ணா நம் கடைநாளில்
உறைந்தவிடந் தனில்
கலைஞர்
கண்டார்வள்ளுவர்
கோட்டமே!

ஃ ஃ ஃ

படிக்கப் படிக்க சுவை சொட்டும் இத்தகையவரிகள் பதிகத்தில் நிறைந்து சிறந்து விளங்குகின்றன.

கலைஞரின் அறிவு, ஆற்றல், செயல்திறம் அத்துணையையும், செந்தமிழ்த் தேனில் குழைத்துக் கவிதைகளாக வடித்துத் தந்துள்ளார் முருகுவண்ணன். புதுப் புது உவமைகளைச் சேர்த்துச் சந்த நயத்தோடு தந்துள்ள இந்தப் பத்துக் கவிதைகளோடு வள்ளுவர் கோட்டம் பற்றிய ஆங்கிலக் கவிதையொன்றினையும் நூலின் இறுதியில் தந்துள்ளார்

'மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது' என்பது போல, இந்தப்பதிகம் சின்னஞ்சிறு நூலாக இருப்பினும் இதன் கீர்த்திமிகப் பெரிதாகும்.

விலை 50 காசு

கிடைக்குமிடம்:

அன்பர் பதிப்பகம்
8. துளசிங்கமுதலி தெரு,
பெரம்பூர், சென்னை. 11

★

முதல்வருக்கு கலைஞர் எழுதிய கடிதம்

மு. கருணாநிதி
தமிழ்நாடு சட்டமன்ற
எதிர்க்கட்சித் தலைவர்.

சென்னை
14-2-79

திரு. எம், ஜி இராமச்சந்திரன்,
முதலமைச்சர், தமிழ்நாடு

அன்புடையீர்,

11-2-79 தேதியிட்ட தங்கள் கடிதம் கிடைத்தது. நான் பொதுக்கூட்டங்களில் என் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்கிற ''அச்சத்தை'' வெளியிட்டுள்ளதாகத் தாங்கள் குறிப்பிட்டு, அதன் பொருட்டு பாதுகாப்புக் காவல் அதிகாரி ஒருவரை எனக்கு அனுப்பி வைத்தீர்கள்.

என் வீடு ஆளுங்கட்சியினரால் தாக்கப்பட்டது முருகையன் எம். பி. ஆளுங் கட்சிக் காரர்களால் கொலைசெய்யப்பட்டது, என் சுற்றுப் பயணத்தின் போது நெல்லை மாவட்டத்தில் என் தலையைக் குறி பார்த்து ஆளுங்கட்சிக்காரர்கள் உளி வீசியது. திருமுட்டம் (ஸ்ரீ முஷ்ணம்) பொதுக் கூட்டத்தில் நானிருந்த மேடையை நோக்கி ஆளுங் கட்சியினர் தாக்குதல் நடத்த ஓடிவந்தது' இவற்றையெல்லாம் பற்றி நான் பொதுக்கூட்டங்களில் பேசியிருப்பது ஏடுகளில் வெளிவந்துள்ளது.

''ஒன்றைக் கருணாநிதி புரிந்துகொள்ளட்டும், எங்களைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டு அந்த இடத்துக்குத் தான் வரலாம் என்று கருணாநிதி கனவு காண்கிறார் நாங்கள் இல்லையென்றால் வேறு யாராவது வரலாம். ஆனால் கருணாநிதி மட்டும் இனிமேல் பதவிக்கு வரமுடியாது. அதை அவர் உணர்ந்து கொள்ளட்டும். கடந்த 1972 முதல் 1978 வரை எங்கள் தோழர்கள் எத்தனை பேரைக்கொன்றிருப்பீர்கள், எத்தனை பேர் பலியானார்கள்?''

என்று தாங்கள் கடந்த 6-2 79 சேலம் கூட்டத்தில் பேசியிருக்கிறீர்கள், இப்படியும் பேசிவிட்டு 'பழி வாங்குவது எங்கள் கொள்கையல்ல கருணாநிதி நீண்டநாள் உயிருடன் இருக்க வேண்டும் என்பதே என் ஆசை' என்றும் கூறி — முதலில் மனதில் இருந்து வந்ததைப் பூசி மெழுகிடப் பார்த்திருக்கிறீர்கள், இந்தப் பேச்சு உங்கள் கட்சி ஏட்டிலேயே வெளிவந்திருக்கிறது.

எனவே முதலமைச்சராகிய தங்களின் நினைவு ஒன்றாக இருக்க — பாவம்; பாதுகாப்புக்கு நீங்கள் அனுப்பும் ஒரு அதிகாரியால் என்ன செய்துவிட இயலும்?

இதையெல்லாம் வைத்துத்தான் எனது கட்சி எனக்குத் தாங்கள் ஒப்புக்காக அனுப்பியுள்ள பாதுகாப்பு அதிகாரியை ஏற்கத்தேவையில்லை என்று முடிவு செய்துவிட்டது

பிறந்தவர்கள் என்றாவது ஒருநாள் மறையத் தான் வேண்டும். அது எனது பழைய நண்பர்கள் அளிக்கும் பரிசாக இருந்தால் அதை நான் வரவேற்கவே செய்வேன்.

அன்புள்ள
மு கருணாநிதி

நகல்: — ஆளுநர் தமிழக அரசு சென்னை

புதிய சமுதாயம் படைப்போம்!

தமிழ் நாட்டில், தமிழர்கள் எங்கெங்கு பின் தங்கி இருக்கிறார்களோ; எந்தெந்தத் துறைகளிலே தமிழர்கள் பல வீனப்பட்டிருக்கிறார்களோ அங்கெல்லாம் தமிழர்கள் முன்னேறவும், அதற்குரிய வழிவகைகளைக் கண்டறிந்து

வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளவும் ஒவ்வொரு துறைக்கும் தனித் தனி அணிகளை—அமைப்புகளை ஏற்படுத்திப் பாடுபட்டுவருகிறது தி. மு. கழகம்.

தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் இந்தப் பணிகளுக்காகவே, தொழிலாளர் அணி—விவசாய அணி: மாணவர் அணி—மகளிர் அணி—இலக்கிய அணி போன்ற பல வேறு அணிகளை தி மு. க சார்பில் உருவாக்கினார். உருவாக்கப்பட்ட அணிகள் ஒவ்வொன்றும் சீரோடும்—சிறப்போடும் தமது பணிகளை ஆற்றி வருகின்றன.

தமிழ் மொழி தழைத்தோங்க, தமிழர்கள் தமிழர்களாய் வாழ மறுமலர்ச்சி இலக்கியங்கள் நமக்கு ஏராளம் தேவை. இதை யாரும் மறுப்பதற்கில்லை. இதற்காக திராவிட இயக்கம் இலக்கியப் புரட்சியே நடத்தியது.

இன்று மறுமலர்ச்சி இலக்கியம் என்ற பெயரால் இனக்கவர்ச்சி இலக்கியங்கள் புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போலக் கிளம்பிக்கொண்டிருக்கின்றன. இது தமிழ் இலக்கியத்திற்கு ஆரோக்கியமான நிலையல்ல. மறுமலர்ச்சிஇலக்கியங்கள் மக்கள் மனதிலே என்ன எண்ணங்களை உருவாக்குகின்றன? எப்படிப்பட்ட சிந்தனைகளை உருவாக்குகின்றன? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இயற்கையைக் கவிஞர்கள் பலர் தம் கற்பனைக் கண்ணாடியில் பார்த்து பல்வேறுகவிதைகளை உருவாக்குகிறார்கள்.

தினசரி கண்ணில் படுவது மீன். இதனைவைத்து பலர்பல கவிதைகளை கருத்துக்களை உலகத்திற்கு உணர்த்தியுள்ளனர்.

'கயல் விழியாள்'' என்று பெண்ணின் அழகிய கண்ணுக்கு உவமை கூறும் கவிதைகள் உண்டு.

இதிகாச இலக்கியங்கள் 'மச்சாவதார மகிமை' பற்றிக் கூறுகின்றன.

இவைகளை யெல்லாம்விட ஒரு கவிதை—இதயம் கவர்ந்த கவிதை ஒன்றை இங்கு காண்போம்:

''மீனின் தாயகம் தண்ணீர், தாயகத்திலிருந்து மீனைப்

நீல நாராயணன்
எம். எல். சி.
தி. மு. க. தலைமை நிலைய அமைப்புச் செயலாளர்)

பிரித்துத்தரையில்போட்டால் அது வாளாவிராது. துடிக்கும். தண்ணீருக்கு—தன் தாயகத்திற்குப் போகத் துடிக்கும். முடியவில்லை என்றால் துடித்து இறந்து போகும். ''தாய்நாட்டிற்காக, தாய் மொழிக்காகத் துடித்துத் துடித்துச் சாவதற்கு மீனிடமிருந்து பாடம் கற்றுக்கொள்'' இதுதான் அந்தக் கவிதையின் சாரம். தமிழ் நாட்டிற்குத் தற்போது இப்படிப்பட்ட மறுமலர்ச்சிக் கவிதைகள் அல்லவா தேவை! மற்றொரு கவிதையைப் பார்ப்போம்!

மனிதன் மூங்கில் காட்டிற்குச் செல்கின்றான். மூங்கில் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்புக்கிளம்புகிறது. நெருப்பிலே கருகி மூங்கில்கள் அழிகின்றன.

இந்தக் காட்சியைவைத்துப் புராண காலக் கவிஞன் பாடுகின்றான்.

'முப்புரம் எரித்த முக்கணன் தீயிதுவோ' இத்தகைய கருத்துககள் இப்போது தேவையா? அதனையே மறுமலர்ச்சிக் கவிஞன் பாடுகின்றான்,

'எம் வயிற்றுத் தீபோல் எரிப்ப—தனியுடைமை நும் வயினும் வேயீருண்டோ''
இது குறள் வடிவிலே வந்த புதுமைக் குறள்.

மூங்கில் கூட்டமே மனித சமுதாயத்தில் தனியுடைமை இருப்பதால் எங்களிடமிருந்து எழுகிற பசி என்னும் தீ எங்களை அழிக்கின்றது. உங்களிடமிருந்து எழுகின்ற தீ உங்களை அழிக்கின்றதே உங்களிடமும் தனியுடைமை உண்டா?

என்ற கேள்வியை எழுப்பிப் பொதுவுடைமைக்கு அச்சாரம் போடுகிறார் புதுமைக் குறள் ஆசிரியர் முத்துச்சாமி புலவர்

இதுபோன்ற நல்ல கருத்துக்களை—எழுச்சி யூட்டும் கற்பனைக் கருவூலங்களை—கவிஞர்கள் அளிக்கட்டும் புதிய சமுதாயம் படைப்போம்.

உறுதிக்கும்!
உழைப்பிற்கும்!!

எங்கள் பிரதிநிதிகள்!
கே. எம். ஜி. மாதவன்
சென்னை-4
பி. நெடுஞ்செழியன்
பி. ஏ.
பாண்டிச்சேரி.

— விசுவரிசம்

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை. மதுரை. 11
தனிச்சிறப்பு: சிலேபி, தேக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 26, மேலமாசி வீதி, 70-சுவாமி சன்னதி
72. அழகர்கோவில் சாலை, 72 C, பெரியார் சாலை, மதுரை.

“மாண்டிடும் புழுவே- மகுடம் கழற்று!”

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மாணவர்கள் மிகக் கொடூரமாக போலீசார் துணையுடன் அ. தி. மு. க. குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர். சில நாட்களுக்கு முன்னர் இதேபோல் தியாகராயர் கல்லூரி மாணவர்களும் அத்துமீறிய தாக்குதலுக்கு ஆளானார்கள். எம். ஜி. ஆரின் அரசியலுக்குப் பாதுகாப்புக் கவசங்களாகவும் படைக் கருவிகளாகவும் நிரந்தரச் சின்னங்களாகவும் ஆகிவிட்ட சைக்கிள் செயின்கள், சோடா பாட்டில்கள் பச்சையப்பன் கல்லூரியின் உட்புறத்திலேயே இரணகளத்தை உருவாக்கியிருக்கின்றன.

இந்த ஆட்சியில் பாராளுமன்ற உறுப்பினரின் உயிருக்குப் பாதுகாப்பில்லை

கழகத் தலைவர் கலைஞரின் உயிரையே பணயம் கேட்கிறது ஆட்சிக் கட்டில்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள்குருதி கொட்டக் கொட்ட இரத்தகாயங்களால் அர்ச்சிக்கப்பட்டுள்ளனர்.

கல்லூரியின் தி. மு. கழக, காங்கிரஸ், ஜனதா மாணவர் அமைப்புகளின் தலைவர்கள் நடந்த சம்பவத்தை விளக்கித் தெளிவாகப் போலீசாரின் காட்டு தர்பாரையும் அ.தி.மு.க. ரவுடிகளின் வெறியாட்டத்தையும் விளக்கி பகிரங்க அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர்.

‘பச்சையப்பன் கல்லூரிக்குள் புகுந்து போலீசாரும் ரௌடிகளும் கள்ளச்சாராயப் பேர்வழிகளும் காலை பத்து மணியிலிருந்துபிற்பகல்மூன்று மணிவரை மாணவர்கள்மீது வன்முறைத் தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசி — துப்பாக்கிகளால் அடித்திருக்கிறார்கள். எறந்தாழ நூறு மாணவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு எம். எம்.சி., கே.எம்.சி. மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பேராசிரியர்கள் வீரராகவன், முனிகிருஷ்ணன், போஜப்பன் மற்றும் ராசகோபால் செல்லச்சாமி தாக்கப்பட்டிருக்கின்றனர்.

இரண்டு கார்களும், ஐம்பது சைக்கிள்களும் எரிக்கப்பட்டுள்ளன. உணவு விடுதியிலிருந்த பொருள்களெல்லாம் நொறுக்கப்பட்டிருக்கின்றன. முதல்வர் அறையையும் சூறையாடியிருக்கிறார்கள். ஆய்வுக்கூடப் பரிசோதனைக் கருவிகளை உடைத்திருக்கிறார்கள். பச்சையப்பன் கல்லூரியே மயானபூமி போல காட்சி தருகிறது.

“ஏற்கனவே தியாகராயர் கல்லூரி மாணவர்கள் இதுபோலத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். மாணவர்கள் பிரச்சினையில் இந்த அரசின் அணுகுமுறை சரியில்லை.”

மேற்கண்டவாறு சட்டப் பேரவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து தோழர் துரைமுருகன் அவர்கள் கையாலாகாத இந்த ஆட்சியைப்பற்றிக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

சட்டமன்றத்தில் துரைமுருகன், இ. காங்கிரஸ் உறுப்பினர் துரைமுத்துசாமி, வலது கம்யூனிஸ்ட் உறுப்பினர் அம்பிகாபதி, இடது கம்யூனிஸ்ட் உறுப்பினர் உமாநாத், முஸ்லீம் லீக் தலைவர் லத்தீப் ஆகியோர் உட்பட எதிர்க்கட்சியின் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களின் அராஜகப் போக்கையும் போலீசாரின் அத்துமீறலையும் மாணவர்களின் பாதுகாப்பற்ற நிலையினையும் விளக்கிக் கண்டித்துப் பேசியுள்ளனர்.

சிறுசம்பவங்களைச் சமரசப்படுத்தி அமைதியுண்டாக்க வேண்டிய காவல்துறை அவற்றைப் பெரு நெருப்பாக்கி தமிழகம்முழுவதுமுள்ளமாணவர்களின் கொந்தளிப்புக்குக் கதவு திறந்துவிட்டிருக்கிறது.

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்ட கொடுமையை பொதுமக்களே நேரில் கண்டுள்ளார்கள்.

சட்டமன்றத்தில் நிதியமைச்சர் மனோகரன் மழுப்பியிருக்கிறார். ‘போலீசார் ஒரு போலீஸ்காரரைக் காக்கக் கல்லூரிக் காம்பவுண்டுக்குள் நுழைந்தனர். இந்த சமயத்தில் பொதுமக்கள் காம்பவுண்டு சுவர் மீது ஏறிக் குதித்து உள்ளே நுழைந்து கல் எறிந்து தாக்கி, சைக்கிள்களை உடைத்தனர்’’ என்று கூறியிருக்கிறார்.

யார் அந்தப் பொதுமக்கள்?

எம். ஜி ஆர். அடிக்கடி ‘பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள்’ என்று எச்சரிக்கை விட்டுக்கொள்வது வழக்கம். அதனைத்தொடர்ந்து மனோகரனின் பல்லவியிலும் ‘பொதுமக்கள் பார்த்திருக்கிறார்கள்’ என்ற இராகத்தின் அலைகள் வீசியிருக்கின்றன.

எங்கே கலவரங்கள் நடந்தாலும் கொலைகள் நடந்தாலும் அராஜகம் தலை தூக்கினாலும் முன்கூட்டியே பாதுகாக்கும் முயற்சிகளை எடுக்கிற எண்ணமும் முயற்சியும்காவல் துறைக்கு இல்லாதுபோயிற்று காரணம், எம். ஜி ஆர். அரசின் கையாலாகாத்தனம் என்பது பல்வேறு சம்பவங்களின் மூலம் நிரூபணமாகிவிட்டது.

மதுரை மாணவர்கள் மண்டைகள் உடைக்கப்பட்டு —

சென்னை மாணவர்கள் செங்குருதி கொட்டிட —

இந்த அராஜகம் மாணவர் சமுதாயத்திடையே பெருங் கொந்தளிப்பினை ஏற்படுத்திவிட்டது,

போலீசார் கல்லூரிக்குள் நுழைந்ததும், பொதுமக்கள் என்ற பெயரால் அ.தி,மு.க. கொலை வெறியர்கள் துணையாக உள்ளே நுழைந்து தாக்கியதும் கண்டிக்கத்தக்கவை என்று பொதுமக்களே நேரில் கூறிவிட்டனர்.

பரவுகின்ற காட்டுத்தீ அணைக்கப்பட ஆளுங்கட்சியால் வழிவகை காணப்பட்டதாகத் தெரியவில்லை.

பக்குவமற்ற எம். ஜி. ஆர். ரசிகர்கள் பொழுது போக்காகக் கொக்கு குருவிகளைச் சுடுவதைப்போல் மாணவர் சமுதாயத்திடையே ‘பொதுமக்கள்’ என்ற பெயரால் கொடூரங்கள் விளைத்திடும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

சென்னை நகரில் தன் செல்வாக்கு காலியாகிவிட்டதால் எம் ஜி.ஆர். எந்தவகையிலாவது தி. மு. க.வை தலைநகரில் சரித்துக் காட்டவேண்டுமென்ற முயற்சியில், குறிப்பாக தி, மு. க.வின் போர் முரசங்களாக விளங்கிடும் மாணவரணியின் மத்தியில் அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறார்.

பச்சையப்பன் மாணவர்களின் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் நொறுக்கப்பட்டுள்ளன, பேராசிரியர்கள் நான்கைந்துபேர் தாக்கப்பட்டுள்ளனர். உயிருக்குப் பாதுகாப்பில்லை. உடைமைக்கும் காவலில்லை.

மக்களின் நம்பிக்கையை இழந்து வருகிற எம். ஜி. ஆர். ஆட்சி, மாணவர்களின் ஆதரவையும் இறுதியாக இழந்துவிட்டது என்பதைச் சென்னை நகரின் பொதுமக்கள் உறுதியாகக் கூறிவிட்டனர்.

அலறித் துடிக்கத் துடிக்க விரட்டப்பட்ட மாணவர்கள் ஆட்டங்கண்டிருக்கும் அரசுக்குச் சென்னை நகரில் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் எம். ஜி. ஆர். எழுதிக் கொண்டிருப்பது தொடர்கதையே தவிர சிறுகதையல்ல.

கதையளக்கும் கதாநாயகர், காவல்துறையை எத்தனை நாள் நம்புவாரோ, பார்ப்போம்!

காவல்துறை கண்ணியத்தை எப்படித்தான் காக்கப் போகிறதோ அதையும் பார்ப்போம்!

காவல்துறை காட்டுத் தர்பாரை முடுக்கிவிட்டிருக்கும் எம். ஜி. ஆர் அரசே

மாணவர் உனக்கு விடுக்கிறது, அபாய அறிவிப்பு —

‘மாண்டிடும் புழுவே, மகுடம் கழற்று.’

— லெனின்

★



அ. தி. மு. க. குண்டர்கள் பச்சையப்டன் கல்லூரி மாணவர்களைத் தாக்கி ஸ்கூட்டர், சைக்கிள்களைத் தீ வைத்துக் கொளுத்தினர்.

அண்ணா - கலைஞர் பற்றி வெளி வந்துள்ள ஆய்வுக் கட்டுரைகள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றியும், கலைஞர் அவர்களைப் பற்றியும் இன்று பல்வேறு ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள் ஆராய்ந்து கோண்டிருக்கிறாகள். அண்ணாவைப் பற்றி இதுவரை 181 ஆய்வுக் கட்டுரைகள் வந்திருக்கின்றன. அதேபோல் டாக்டர் கலைஞர் அவர்களைப் பற்றி இதுவரை 152 ஆய்வுக் கட்டுரைகள் வந்துவிட்டன. இன்னும் பலர் ஆய்வுசெய்துகொண்டும்இருக்கின்றனர். அவர்களுடைய கட்டுரைகளும் வர இருக்கின்றன.

இந்தத் தகவலை, டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள், சென்னை மாவட்ட இலக்கிய அணி நடத்திய முப்பெரும் விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

★ வயிறும் வரலாறும்! ★

இந்திரா காந்தியின் ஆட்சியில் 'ஒரு கட்சி பெற்றிருந்த மிருக பலத்தின்' கைதூக்கல் பாராளு மன்றக் கூடத்திற்குள்ளேயும் நீண்ட பெருமூச்சும் அச்சமும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரு இருண்ட இந்தியாவின் சரித்திர மின்னல்களாயின.

சிலர் தாங்கள் சூட்டிக் கொண்டிருக்கிற கிரீடங்களைக் காத்துக் கொள்வதற்காகப் பலரின் தலைகளை வாடகைக்குப் பெற்றுக் கொண்டிருந்தார்கள்

குறைந்த வாக்குகளில் நிறைவான இடங்களைப் பெற்று, பெரும்பான்மையாகி விட்ட காரணத்தால் அதிகார பீடத்தில் அமர்ந்திருந்தோர் நாக்கை வாளாக்கி நாணயத்தைக் கூறு போட்டார்கள்.

இன்று. தமிழகத்துச் சூழலில், பாதுகாப்பற்ற மக்களின் சார்பில் சில வரலாற்றுத் துளிகளை நாற்காலி மகத்துவத்தில் மிதப்போருக்குச் சுட்டிக் காட்ட வேண்டியதாகிறது

உரத்த குரலை அடக்கிச் சொண்டிருக்கும் உதடுகள் ஆள்வோர் கட்டவிழ்த்து விடுகிற அராஜகத்தால் தைக்கப்படலாம் ஊமையின் நெஞ்சிலெழுந்த காவிய உணர்வுகளாக இன்றைக்கு மக்களின் போராட்ட உணர்வுகள் கனன்றுகொண்டிருக்கின்றன. அதிகாரப் பார்வைக்கு இந்த நிலை இன்று பட்டதாகத் தெரியவில்லை

ஜனநாயகம், சமத்துவம் ஆகிய கொள்கைகளை மேற்கொண்டு, அரசியலை மக்களுக்காக நடத்த வேண்டிய ஆளும் வர்க்கத்தினர் பல நேரங்களில் பல நாடுகளில் எப்படியெல்லாம் நடந்து கொண்டார்கள் என்பதை வரலாற்றுப் பக்கங்களில் காண முடிகிறது இந்த நூற்றுண்டில் மாபெரும் நாடாக உருவாகியுள்ள ருசியாவில், இரண்டாம் நிகோலஸ் என்னும் ஜார் மன்னன் ஆட்சியின் போது சமதர்மப் புரட்சிக்காரர்களுக்கு ஏற்பட்ட நிலை மன்னனின் எதேச்சாதிகாரம் மக்களிடையே நிலவியிருந்த மனப்பாங்கு—ஆகியவை எந்த அளவு இருந்தனவென்பதைத் தொகுத்துப் பார்க்கிறபோது—வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்த இந்த நூற்றுண்டிலும் அதே நிலை பல நேரங்களில், பல இடங்களில் பரவி நிற்பதும் கண் முன்னுல் வந்து நிற்கிறது. இதனை நினைத்துப் பார்க்கவும் சிந்தித்துப் பார்த்திடவும் அரசியல், சிந்தனை ஏடுகள் பலவற்றைத் தந்த வெ. சாமிநாத சர்மா அவர்கள் எழுதிய 'ருசிய வரலாறு' என்னும் நூலின் சிலவரிகளை அப்படியே தருவது நல்லது. இப்போதும் இன்றைய அரசியலோடு இணைத்துப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்ட காரணத்தால்! அரசியல் உலகினை ஆட்டிப் படைக்கும் எதேச்சாதிகாரப் போக்குகளின் படப்பிடிப்பாக அமைந்துள்ளன அந்த வரிகள்!...

"......ஆனுல் இந்தச் சீர்திருத்தம் புரட்சிவாதிகளுக்குத் திருப்தியை அளிக்கவில்லை, இவர்கள் மேலும் தொடர்ந்து வேலை நிறுத்தத்தை நடத்துவதற்கு முனைந்தார்கள். இவர்களுடைய நோக்கம் அரசியல் முன்னேற்றம், அதாவது ஜார் அரசாங்கத்தினிடமிருந்து சர்வ அதிகாரங்களையும் பிடுங்கி ஜனங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது. ஆனுல் நகரத் தொழிலாளர்களும் கிராம விவசாயிகளும் அரசியல் முன்னேற்றத்தை அவ்வளவு பிரதானமாகக்கருதவில்லை. அப்பொழுதிருந்த ஸ்திதியில் தொழிலாளர்களுக்குத் தேவையாயிருந்தது உயர்ந்த கூலி விவசாயிகளுக்குத் தேவையாயிருந்தது, உழுது பயிரிடப் போதுமான நிலம்: இதனுல் புரட்சிக்காரர்களுக்கும் பெரும்பாலோரான தொழிலாளர்கள். விவசாயிகள் இவர்களுக்கும் மத்தியில் ஒரு பிளவு ஏற்படத் தொடங்கியது. இதனை அரசாங்கத்தார் விரிவுபடுத்தினுர்கள். பசி நோயால் பரதவிந்துக் கொண்டிருக்கும் பாமர ஜனங்களுக்கு, தாங்கள் ஏதோ அனுகூலங்கள் செய்யப்போவதாகச் சமிக்ஞை காட்டி அவர்களைப் புரட்சி வாதிகளுக்கெதிராகத் தூண்டினுர்கள். இதனுல் சில்லறைக் கலகங்களும் குழப்பங்களும் ஆங்காங்கே ஏற்பட்டன. நாட்டிலே அமைதியை நிலை நாட்ட வேண்டுமென்று சொல்லிக் கொண்டு அரசாங்கத்தார் அடக்கு முறையைக் கடுமையாகப் பிரயோகித்தனர். சோவியத்துக்களை (அமைப்புக்களை) பலவந்தமாகக் கலைத்தனர் ஓரிரண்டு மாதங்களுக்குள் புரட்சி இயக்கத்தை அடக்கி ஒடுக்கி விட்டனர் ருஷ்யா முழுவதும் கணக்கெடுத்துப் பார்த்தபோது, சுமார் பதினுலாயிரம் பேர் இந்த அடக்கு முறைக்குப் பலியாகியிருந்தனர் சிறிய ஜப்பானிடத்தில் தோல்வியடைந்ததற்குப் பிரதியாகத் தன் பிரஜைகளிடத்தில் பெரிய பழி தீர்த்துக் கொண்டான் ஜார் அரசன்.

புரட்சியை அடக்கி ஒடுக்கியாகி விட்டது. இனி ஜார் அரசன் தன் இஷ்டப்படி அரசியல் விவகாரங்களை நடத்திக் கொண்டு போகலாம். ஆனுல் அவன் அப்படிச்செய்ய இஷ்டப்படவில்லை தனது சுயேச்சாதிகாரக் கோலத்தை ஜனநாயகப் போர்வையினுல் மறைத்துக் கொண்டு அரசியல் மேடையில் நடிப்பதென்று தீர்மானித்தான். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று—சமுதாயத்தின் மேல் படியிலிருந்த நிலச்சுவான்தார்கள், பெரிய வியாபாரிகள், தொழில் முதலாளிகள் முதலியோரைத் தன் கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டுமென்பது. ஏனென்றுல் தேசத்து மகா ஜனங்கள் அடக்கு முறைகளினுலும் வறுமை, பஞ்சம், பிணி முதலியவைகளினுலும் அதிகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இந்தக் கஷ்டத்தினுல் அவர்களுக்கு அரசாங்கத்தின் மீது அதிகக் கோபம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் எந்தச் சமயத்திலும் அரசாங்கத்திற்கு விரோதமாகக் கிளம்பலாம் அப்பொழுது தனக்கு ஒரு சிலருடைய துணையாவது தேவையாயிருக்குமல்லவா? இதற்காகப் பணக்காரர்களைத் திருப்திப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்று ஜார் மன்னன் கருதினுன்.

மற்றென்று—மேற்கு வல்லரசுகளிடத்தில் நல்ல பெயர் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது. ஜார் ஆட்சி என்று சொன்னுல் அடக்கு முறைக்கு அடையாளம் என்கிற மாதிரிதான் ஐரோப்பிய நாடுகளில் அபிப்பிராயம் இருந்தது. இந்த அபிப்பிராயத்தைப் போக்கி ஜன விருப்பப்படியே தான் நடந்து கொள்வதாகக் காட்டிக் கொள்ள வேண்டுமென்று ஜார் அரசன் விரும்பினுன். எனவே, மேலே சொன்ன அறிக்கைப்படி ஜனப் பிரதிநிதி சபையைக் கூட்டுமாறு உத்தரவு செய்தான். ஜனப்

வில்லிநாடன்

பிரதிநிதி சபைக்கு ரஷிய பாஷையில் டூமா' என்று பெயர் இதைத்தான் ருசியாவின் பார்லிமெண்ட்' என்று சொல்வார்கள் டூமா என்றுல் சிந்தனை செய்கிற இடம் என்று அர்த்தம்.

டூமாவுக்குச் சம்பிரதாயமான தேர்தல்கள் நடைபெற்றன சமுதாயத்தின் மத்திய வகுப்பைச் சேர்ந்தவர்கள் அபேட்சகர்களாக நின்று வெற்றிபெற்றுர்கள். இவர்களின் பெரும்பாலோர் மிதவாத மனப்பான்மை கொண்டவர்கள். இவர்களைக் கொண்ட டூமா, முதன் முறையாக 1906 ஆம் ஆண்டு மே மாதம் கூடியது விவசாயிகளின் வறுமைப் பிணியைப் போக்கி அவர்களுடைய கோபத்தைத்தணிக்க வேண்டுமென்பதற்காக அங்கத்தினர்கள் சிலர் சீர்திருத்தப் பிரேரணைகளைக் கொண்டு வந்தார்கள். ஆனுல் இவை ஜார் மன்னனுக்குப் பிடிக்கவில்லை. டூமோவைக்கலைத்துவிட்டான். சுமார் இரண்டரை மாதத்தோடு முதல் டூமாவின் வாழ்வு முடிந்தது.

1907 ஆம் ஆண்டுதொடக்கத்தில் இரண்டாவது டூமாவுக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. புரட்சிவாதிகளும் அவர்களை ஆதரிக்கிற மற்ற தீவிரவாதிகளும் தேர்தலில் வெற்றிபெறக் கூடாதென்பதற்காக போலீசார் என்னென்ன உபத்திரவங்களைச் செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்தனர், தீவிரப் போக்குடைய அபேட்சகர்களைச் சிறையிலே பிடித்துத் தள்ளிவிடுவது என்கிற சுலபமான முறையை அனுஷ்டித்தனர். இதனுல் சமான்யத் திறமையுடையவர்களும் கொஞ்சம் பயந்த போக்குடையவர்களும் தேர்தலில் வெற்றிபெற்றுப் பிரதிநிதிகளாக வந்தனர். ஆனுல் இவர்களுடைய போக்கு கூட ஜார் மன்னனுக்குப் பிடிக்கவில்லை, அரசாங்கத்திற்கெதிராகச் சூழ்ச்சி செய்த குற்றத்தை இவர்கள் மீது சுமத்தி, டூமாவைக் கலைத்துவிட்டான். கடைசியில் ஆராய்ந்துப்பார்க்கிறபோது அரசாங்கத்தின் ரகசியப் போலீசாரே. ஒரு சதியாலோசனைக் குற்றத்தை சிருஷ்டித்து அதனை அங்கத்தின் மீது சுமத்தினர் என்று வெளியாயிற்று. இந்த இரண்டாவது டூமாவின் வாழ்வு மூன்று மாதத்தோடு முடிந்தது"

—இது ஜார் மன்னன் காலத்துச் சூழலின் படப்பிடிப்பு! அதுமட்டுமல்ல; ஜார் மன்னன் ரஸ்புடீன் போன்ற தவறுன வழிகாட்டிகளாலும் துர்ப் போதனைகளாலும் ஆட்சிக்கும் ஆட்சி பீடத்திற்கும் முடிவு ஏற்பட்டு விட்டது.

இது வரலாற்றில் முற்றுப் புள்ளியாகிப்போன கதையாகத் தெரியவில்லை. ஜார்கள் தோன்றிக் கொண்டே தான் இருக்கிறுர்கள். அந்த போக்குகள் நிலவிக்கொண்டுதான் இருக்கின்றன. வழி வழி வரலாற்றில் இதே போன்றபக்கங்கள் இணைக்கப் பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இன்றும் என்றும் சிந்தித்துப் பார்க்கவே சாமிநாத சர்மா அவர்கள் எழுதியதை அப்படியே சுட்டிக் காட்டப்பட்டு உள்ளது. — இப்போது ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதற்காக.

'இன்றையசெய்தி நாளைய வரலாறு என்பது உண்மை. இளந்தலைமுறையினரை இன்றைய சிந்தனையே நாளைய நல்லுலகிற்கு அழைத்துச் செல்லும். இந்திய அரசியல் அரங்கிலும் தமிழ்நாட்டின் பொது வாழ்வுத் துறையிலும் கருமேகங்களின் இருள் சூழா வண்ணம் ஒளிபெற்ற சிந்தனைகளும் செயல்களும் உருப்பெற வேண்டும். வயிற்றைப் பிரதானமாகக் கொண்டோர் மத்தியில் வரலாற்றைச் சுட்டிக் காட்ட வேண்டியது! கட்டாயமாயிற்று!

எடுத்துக்காட்டியதை நினைத்துப் பாருங்கள், இப்போது தமிழ் நாட்டில் நடைபெறுகிற ஆபத்தான போக்குகள் புலப்பட்டே தீரும்!

★

இது என்ன 'தேசாபிமானம்'?

நமது பரந்த பாரத புண்ணிய பூமியான இந்தியாவில் உள்ள ரூபாய் நோட்டுகளில் அதன் பெயரை பதின்மூன்று மாநில மொழிகளில் அச்சடித்துள்ளனர். ஆனுல் கடந்த பத்து அல்லது பதினைந்து ஆண்டுகட்கு முன்பு வெளியிட்ட ரூபாய் நோட்டுகளைப் பார்த்ததில் மேலிருந்து கீழாகத் தமிழ் மொழியில், ரூபாயின் பெயரை 5, 6-வது இடத்தில் வெளியிட்டுள்ளனர். அதில் சில... 10 ரூபாய் எல்-45 231506ல் — 5-வது இடமும். 5 ரூபாய் - வி-75 890716ல் — 6வது இடமும். 1 ரூபாய் டி. 88 - 826668ல் — 5வது இடமும் தமிழ்ப் பெயர் இருந்தது. ஆனுல் தற்போது சில ஆண்டுகளாக புதிய வடிவத்தோடு நடுவண் அரசு வெளியிட்டுள்ள ரூ 100, 50, 20 10, 5, 2, 1, ஆகிய நோட்டுக்களில் தமிழின் இடம் 11-வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளதைப் பார்த்தால் இதை என்ன "தேசாபிமானம்" என்று கூறுவது? இதுதான் ஒருமைப்பாடு, தேசியம் என்று சொல்வதா?

இந்த வேறுபாடும், வித்தியாசமும் ஏன் ஏற்பட்டது என்றே தெரியவில்லை. பத்தாண்டுக்கு முன்பு இருந்த தமிழின் இடம் இப்போது கீழே தள்ளப்பட்டது ஏன்?

சாமி. திராவிடமணி

காரைக்குடி.

தன்சேய் விளக்கின்ற மரகத மணிகள் கண்டு இது
என்சேய் என மகிழ்கின்றாள் நிலமடந்தை
தஞ்சை—விளைக்கின்ற மரகத நெல்மணிகள் கண்டு இது
நஞ்சை என மகிழ்கின்றாள் நிலமடந்தை
புகார் இருக்கும் தஞ்சைக் கடைமடையில்
பூமிபுகார் இருக்கும் தஞ்சைக் கடலோரம்
மிகார் என் சொல்லை இங்குளார் அதனால்
புகார் தீய நினைவுடனே முன்
புகார்த் திகைத் திரு நாள்,
முன்பு
கார்த்திகைத் திருநாள்
முன்பு—கார்—திகைத்து
இருநாள் ஒருநாள் அல்ல பலநாள்
பருவ மழையின்றிப் போனாலும்
துருவ மீன் போல ஒளி காட்டித் தஞ்சையின் வெற்றிப்
புருவம் தூக்கி நின்றீர் வாழ்க நன்று!
வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் மழையன்றோ?
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழையன்றோ?
கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதுஉம் எல்லாம் மழையன்றோ?
நீர் இன்றி அமையாது உலகெனினும் அதனை வகைப்படுத்த

ஆறின்றி இயலாது என உணர்ந்தார்
ஆறுகண்டார்; அதனாலே சோறுகண்டார்
எத்தனை ஆறு
இத்தரை மீது
பத்தரை மாற்று
முத்திரைப் பொன்னும்
கித்திரை நெல்லைச்
சிரிக்கச் செய்தது; பச்சைப்பட்டு
விரிக்கச் செய்தது வறுமைப் பேயை
எரிக்கச் செய்தது
வீட்டோரம் காட்டோரம் தேர்தல்
ஒட்டோரம் இருக்கும் நல்லீர் - சிறிது
ஆற்றோரம் பாரீர்; இன்று என்
பாட்டோரம் வாரீர் நன்று;
குடமுருட்டிக் காவிரிப்பெண் ஆடுகின்ற காட்சி கண்டு
—காதல்
கொள் இடம் இதுதான் என்று; காதல்
கொள்ளிடம் இதுதான் என்று
வீரசோழன் வருகின்றான் ஓடம் போக்கி என்மேல்

வை கை என்று வளைக்கின்றான்
வைகை என்று வளைகின்றான் உன் பல்
மணிமுத்தா என நெளிகின்றான்
காவிரியோ கண் சிமிட்டி, என்
மன்னியார் வருகின்றாள்!
மறைந்திடுக அத்தான் என்கின்றாள்; அவளே
வரட்டுமே மன்னியார், நம்
காதலுக்கு அவளென்ன கல்லணையா?
காமினி பாமினி நாமினி காதலர்கள்
ஆம் இனித் திருமணமென்று பிறருக்குச் சொல்லிவிடு
காதல் அக்கினியாறுமோ கண்ணே அருகில் வந்துவிடு!
காதல் அக்கினி ஆறுமோ? கண்ணே அருகில் வந்துவிடு
அவளோ
யாரும் நம்மீது தப்பெண்ணார் நம்
காதல் பிரிக்க வெண்ணார் பிறர்
வெட்டார் நம் உறவெனினும் அத்தான்
வெட்கம் என்னைத் தடுக்குதென்றாள்
வீரசோழன் விரைந்தணைத்துக் கொண்டவாறு
பாலாறும் முன்னே பருகிடுவோம் வா என்றாள்
மஞ்சளார் முகவதியும் அவன் மடிமீது சாய்ந்தபடி
மணமெப்போது அத்தான் என்றாள்
பெரியாறு தலைமையிலே பெரிதாக நடக்குமென்றாள்
ஆறுகளை ஒன்றாக இணைத்துக் காதல் கதை
பின்னியதாய்க் கருதாதீர்! ஆங்காங்கு வாய்ப்புக்
கூறுகளைச் சீராக்கி வளம்பெருக்கும்
நதிகளுக்கு நன்றி சொல்வோம்.
உழுவார் உலகத்தார்க்கு ஆணி
உழந்தும் உழவே தலை என
எழுவார் வள்ளுவரும் வாழ்த்துரைக்க
உழவன் ஓர் தாமரை!
சேற்றில் மலரும் அவன் வாழ்வு!
உழவனோர் மன்னன்
நாற்று முடியிருக்கும் அவன் தலையில்
உழவனோர் வீரன்; என்றும்
போர் இருக்கும். அவன்களத்தில் வைக்கோற் போர்]
உழவனோர் ஓவியன்
வயல்கள் அனைத்தும் அவன் வரைந்த சித்திரம்
உழவனோர் தெய்வம்
உயிர்களைக் காப்பதால்!
குருவை முன்வைத்து தாளடியில் உழைக்கின்ற
திருவைப் போற்றிடுவோம்
நிலம் பிறந்த நாளாகப் பாடுபட்டு வருகின்றீர்
நலம் சிறக்க நாட்டுக்கு இன்னுயிரைக்
கொடுக்கின்றீர் உடலில்
பலம் இருக்கும் வரையினிலே வயல்வெளியில்
—கிடக்கின்றீர்
கலம், மரக்கால், படியென்று பழங்கணக்கெழுதிப்
—பார்க்கின்றீர்
உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கெதுவும்
—மிஞ்சாதென்று
உதட்டையே பிதுக்குகின்றீர்
ஏனிந்த நிலையென்று யோசித்ததாலே
ஏற்றமிகு முன்னேற்றப் பாதைக்கு வழிகண்டோம்
கண்ட வழி;
ஏட்டோடு இருப்பது அழகுமல்ல; கவியரங்கப்
பாட்டோடு முடிவதும் நல்லதல்ல
வீட்டோடு கிடப்பவர்கள் விழித்தெழுக தமிழ்
நாட்டோரே விடுதலை நாளின்று துடித்தெழுக
காட்டோடு கழனியோடு உழல்கின்றீர்

[illegible]ட்டோடு மாட்டோடு சுழல்கின்றீர்
பழையமுறை மாற்றிப் பயிர் செய்தால்
நிறையப் பலன்கிடைக்க வழியுண்டு
உழக்குதான் மிச்சமென்ற இருட்டு நிலை
கிழக்கு வெளுத்ததுபோல் மறைந்துவிடும்
நந்தன்போல் ஓர் இரவில் பயிர் செய்ய
நான் உம்மை அழைக்கவில்லை
கந்தா கடம்பா கருப்பா முனியா என்று
கருவேல மரத்தடியில் 'மிராசுதார்' போடும் கூச்சல்
கால்நடையைக் கட்டிப் போட்டு
அவை கருணையுடன் தந்தஉரம்
சால்கொண்டு மனித முதுகொடிய
இறைத்த தண்ணீர்—தார்க்
கோல் கொண்டு குத்துவதால் சுற்றும் எருது
இப்படிப் பரம்பரையாய் நடக்கின்ற உழவுத் தொழிலில்
பம்பரத்தின் வேகம்தான் வேண்டுமென்று
—இணைக்கின்றோம் விஞ்ஞானத்தை
படித்தவர்கள் மேல்நாட்டில் விதைக்கின்றார்
—விளைக்கின்றார்
விஞ்ஞானக் கருவியினால் உழுகின்றார்;
—இங்கோ படித்தவர்கள்
அழுகின்றார் பயிர் விளைக்க
விழுகின்றார் வரிசையாக வேலைதேடி
உணவளிக்கும் வேலையிலும்
உயர்ந்ததோ வேறோர் வேலை?
ஓதுவார் எல்ல்லாம் உழுவார் தலைக்கடையில் என்றால்
பழைய பொருள்
படித்தவர் தொழுதிடுவார் ஏர் பிடித்தவரை
—என்பதுதான்
அது மாற்றி நாம் அமைக்க வேண்டுமன்றோ?
"ஓதுவார் எல்லாம் உழுவார் தலைக்கடையில்"
படித்தவர் எல்லாம் உழுவார் தலைக்கடையில் - அதாவது
தலைமடையில், கடைமடையில் உழுவார்!
பின்னிலையில் இருந்திட்டோம் பலநாளாய்—உணவில்
தன்னிறைவு காண்பதற்கு ஊக்கம்—கொள்வோம்
நாட்டிலே உற்பத்தி பெருக்கென்றால்—அதைவிடுத்து
வீட்டிலே உற்பத்தி பெருக்குகின்றார்
முத்தென்று
மணியென்றும்
சிட்டென்றும்
சிமிழென்றும்
கண்ணென்றும்
மூக்கென்றும்
கணக்கின்றிப் பெறுதல் விட்டு
நெல் என்றும்
வரகென்றும்
கம்பென்றும்
கரும்பென்றும்
உளுந்தென்றும்
பருப்பென்றும்
எள் என்றும்
கொள் என்றும்
உணவு பெருக்கிடுவீர்; உற்பத்தி செய்திடுவீர்!

(13–8–1968-ல் குடந்தை மூர்த்தி கலையரங்கில் நடந்த கவியரங்கத்தில் பாடியது)



நரகல் நடையழகர் நடுங்கா நாக்கழகர் !

நான் பாளையங்கோட்டைச் சிறையில் இருந்தேனாம். அப்போது மன்னிப்பு கேட்டுக்கொண்டேனாம். என்னை விடுதலை செய் என்று வேண்டினேனாம் — எம்.ஜி. ஆர் பேசுகிறார். முதலமைச்சர் என்கிற அகந்தையைத் தவிர வேறென்ன காரணம்?

''வன்முறைச் சம்பவங்களுக்கும் கருணாநிதிக்கும் சம்பந்தமில்லை. அவனை ஏன் தனிமைச் சிறையில்போட்டு வாட்ட வேண்டும்?' என்று ''தன்னை வெல்வான் தரணியை வெல்வான்'' என்ற தலைப்பில் அறிஞர் அண்ணா பத்திரிகையில் எழுதினார்.

என்னைப்பாளையங்கோட்டைச் சிறையில் சந்தித்துவிட்டு நெல்லைப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது சொன்னார். அது இன்று சொன்னதுபோல் இருக்கிறது. 'என் தம்பி அடைக்கப்பட்டிருக்கிற பாளையங்கோட்டைச் சிறை புனித யாத்திரைத் தலம்' என்று சொன்னார்.

அப்படிப்பட்ட பெருமையை — நற்சான்றை அண்ணனிடத்தில் பெற்ற இந்தக் கருணாநிதியைப் பார்த்தா எம். ஜி. ஆர் கோழை என்று சொல்வது?

கோழையிலும் கடைந்தெடுத்த கோழை எம் ஜி. ஆர்.

சேலத்தில் அவர் பேசிய பேச்சு ஒரு முதலமைச்சர் பேசுகிற பேச்சா?

'நரகல் நடையழகர்—

நடுங்கா நாக்கழகர்' என்று அண்ணா சொல்வாரே அதற்கேற்ற உதாரணமாக எம்.ஜி.ஆர். திகழ்கிறார்.

பாளையங்கோட்டை சிறையில் நான் இருந்தபோது உயர்நீதி மன்றத்திற்குப் போட்ட மனு என்ன? — ஹேபியஸ் கார்பஸ்!

ஹேபியஸ்கார்பஸ் என்றால் என்ன என்று சட்டம் படித்தவர்களுக்கு—வழக்கறிஞர்களுக்குத்தான் தெரியும்.

'எமர்ஜன்சி'யில் 'மிசா' இருந்தது போல டி.ஐ.ஆர். என்கிற இந்தியப் பாதுகாப்புச் சட்டம் இருந்தது. அந்தச் சட்டத்தில் என்னைக் கைது செய்திருந்தார்கள்.

'என்னை விசாரணையில்லாமல் சிறையில் வைத்திருக்கிறார்கள் — என்னை கோர்ட்டுக்கு அழைத்துவிசாரணைசெய்யச் சொல்லுங்கள்' என்பதுதான் ஹேபியஸ் கார்பசின் மூலக் கொள்கை.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் கருணாநிதி தூண்டிவிட்டது என்று பக்தவத்சலம் காரணம் காட்டிச் சட்டசபையில் சொன்னார். 'கருணாநிதியைப்பற்றி ஆள் உயர பைல் இருக்கிறது எனவேதான் பாளையங்கோட்டைச் சிறையிலே பூட்டி வைத்திருக்கிறேன்' என்று சொன்னார்.

வன்முறைச் செயலுக்கு நான் காரணமல்ல என்றேன். இன்றைக்குச் சட்ட அமைச்சராக இருக்கிற நாராயணசாமி முதலியார்தான் அன்றைக்கு வழக்கறிஞர். அண்ணா வீட்டில்தான் அந்த மனு தயாரிக்கப்பட்டது. நான் பாளையங்கோட்டையிலே இருந்தேன்.

அண்ணா அதைப் படித்துவிட்டுத்தான் நாராயணசாமி முதலியாரைப் பாளையங்கோட்டைச் சிறைக்கு அனுப்பி என்னிடம் கையெழுத்துப் பெற்றுவரச்செய்தார். நான் கையெழுத்துப்போட்டேன்

அதிலே இருப்பதென்ன? இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாணவர்கள் நடத்துகிற கிளர்ச்சிகள்; அதன் காரணமாகப் பல போலீசார் கொல்லப்பட்டது; பஸ்கள் கொளுத்தப்பட்டது இந்த வன்முறைச் சம்பவங்களுக்கும் தி. மு. கழகத்திற்கும் சம்பந்தமில்லை — அவைகளை நான் தூண்டிவிட்டதாகச் சொல்வது தவறு எனவே கோர்ட்டார் அவர்களே என்னைச் சிறைச்சாலையிலிருந்து உங்கள் கோர்ட்டுக்கு அழைத்து விசாரணை செய்ய வேண்டும் — நான் சிறையில் இருப்பது எந்த வகையிலும் நியாயமாகாது என்று சொன்னேன்.

நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

எந்தப் போராட்டத்திலாவது தி மு கழகமோ — அண்ணாவோ கட்டளையிட்டு அந்தப் போராட்டத்தில் நான் ஈடுபட்டு — அதிலே சிறை சென்ற பிறகு இப்படி நான் மனு போட்டதுண்டா?

கல்லக்குடிப் போராட்டத்திலே தண்டவாளத்திலே தலைவைத்துப் படுத்தேன். ஆறுமாதக் காலம் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். நான் மனுப்போட்டது கிடையாது.

விலைவாசிப் போராட்டத்தில் மறியல் களத்திற்குச் செல் என்று அண்ணா ஆணையிட்டார். மறியல் செய்தேன் — சிறை சென்றேன் - மனுப்போட்டதில்லை.

இப்படி நான் தலைமையேற்றுச் சென்ற பல போராட்டங்கள். அவைகளுக்கெல்லாம் மனுப்போட்டது கிடையாது.

ஆனால் வலுவிலே வந்து நான் வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறிப் பாதுகாப்புச் சட்டப்படி விசாரணையில்லாமல் என்னைக் கைது செய்து — விசாரணையில்லாமல் சிறையில் வைத்திருப்பது குற்றம் என்று ஹேபியஸ் கார்பஸ் மனுப் போட்டது எந்த வகையிலும் தவறானது அல்ல, அது கோழைத்தனமாகாது!

சீசர் இறந்தபோது ஆன்டனி உயிலை வைத்துக்கொண்டு படித்தானே அதுபோல 'இதோ பார் கருணாநிதி கொடுத்த மனு என் கையில் இருக்கிறது' என்கிறார். மனுவில் என்ன இருக்கிறது என்று பக்கத்திலிருக்கிற மனோகரனிடம் கொடுத்தால் படித்துச் சொல்வார். சட்ட அமைச்சர் நாராயணசாமி முதலியாரிடம் கொடுத்தால் அந்த மனு ஏன் கொடுக்கப்பட்டது என்பதை விளக்குவார்.

கலைஞர்
(சிதம்பரம் பொதுக்கூட்டப் பேச்சு)

கன்னித் தமிழகமும்

"வரலாறு என்னும் தங்கப் பேழைக்குத் திறவு கோலாய்த் திகழ்பவைகளே தூபிகள், கல்லறைகள், நாணயங்கள் கல்வெட்டுக்கள்' என்ற டாக்டர் கலைஞரின் மொழிகேற்ப, வரலாற்றிற்கு நல்நயங்களாக நாணயங்களும் நல்முத்துகளாக, கல்வெட்டுக்களும் இன்முகங்களாக இலக்கியங்களும் செம்பொன்களாகச் செப்பேடுகளும் தேனடைகளாகத் தனிபாடல்களும் அமுதத் துளிகளாக அயலார் குறிப்புகளும் பயன்பட்டாலும் நம் நாட்டுச் செய்திகளை அறியப்போதுமான சான்றுகள் கிடைத்தில ஏன்?

தென்னாடு தொன்னாடு

'இந்தியாவில் முதன் முதலில் மனிதன் தோன்றி வளர்ந்த வாழ்ந்த இடம் தென்னாடு'

—வின்ஸ்டன் சுமித்
(ஆகஸ்ட் போர்டு இந்திய வரலாறு பக் 5)

"தென் ஆசியாவிலேயே மிகவும் பழமையான பகுதி தென்னிந்தியா

—டோப்பினார்ட்

"மனிதன் முதல் பிறப்பு தோற்றம் எல்லாமே தென்னிந்தியாவில்தான்'

—பிரிட்டிஷ் அசோசியேஷனின் தலைவர் சர். ஜான் எட்வான்ஸ்

"'மனிதனின் மிகப் புராதனமான நாகரிகமே தென்னிந்தியாவில் தான் இருக்கிறது'

(காணுமற்போன லெமூரியாவில்
—ஸ்காட் எலியட்

முன்சொன்ன ஆன்றோரின் மொழிகளிலிருந்து தென்னாடு தொன்னாடென்பதை அறிய முடிகிறது.

இருண்ட இடைக்காலம்

இடைக்கால (கி பி. 250 முதல் கி. பி. 575 வரை] தமிழகத்தின் வரலாற்றினை முழுமையாக அறிய முடியாததால, இக்காலம் தமிழக வரலாற்றின் இருண்ட காலமென்று 'தமிழக வரலாறு' எனும நூலில டாக்டர் இராசமாணிக்கனார் குறிப்பிடுகிறார். இக் காலத்தில் தமிழகத்தில் என்னதான் நடந்தது? களப்பிரர் என்னும் கூட்டத்தார் புகுந்து கன்னித் தமிழகத்தை நாசப்படுத்தினர்.

பல்லவர், சளுக்கர் செப்பேடுகளும் இரண்டாம் நந்திவர்மன் காலத்துக்காசக்குடிப் பட்டயமும், இந்தியக் கல்வெட்டு பதினேழாம் தொகுதியில் பதினாறாவது எண்ணாக ஆங்கில எழுத்தாக்க முறையில் எச். கிருஷ்ண சாஸ்திரி பி ஏ பதிப்பித்த [எபிகிராபியா இண்டிகா தொகுதி 17 நம் 16) வேள்விக் குடிச் செப்பேடும் பெரியபுராணமும் இலக்கியச் செய்தியும் அயலார் குறிப்பு சிலவும் களப்பிரரைப் பற்றி அறிய உதவுகின்றன.

களப்பிரர் யார்?

காளத்தி மலைப்பகுதிகளில் களவர் என்பார் குடியிருந்தனர். 'களபரு' என்று கன்னடத்திலும்; 'களப்ரா' என்று வடமொழியிலும் 'களப்பிர'ரென்று தமிழிலும் அழைக்கப்படுகிறார்கள் களப்பிரர்கள் ஒரு கூட்டத்தினர் அரசபரம்பரையினர் அல்லர். இவர்கள் மூவேந்தரை வென்றவராகப் பாண்டியர் பல்லவர் பட்டயங்கள் குறிக்கின்றன.

(டாக்டர்
மா. இராசமாணிக்கனார்
எம்.ஏ எம் ஓ.எல்.பிடி பி.எச் டி
பல்லவர் வரலாறு
பக்கம் 37)

சாதவாகனர்களின் வீழ்ச்சியாலும் பல்லவர்களின் கை ஓங்கி வந்ததாலும் சமுத்திரகுப்தனின் படையெடுப்பினாலும் கி. பி, 3 ஆம் 4 ஆம் நூற்றாண்டுகளில் தொண்டை மண்டலத்தில் மிகப் பெரியதொரு அரசியற் குழப்பமேற்பட்ட வேளை; களப்பிரர்கள் திடீரென்று குடிபெயர்ந்து தெற்கு நோக்கிப் பாய்ந்து பாண்டியரையும் பல்லவரையும். சோழரையும் ஒடுக்கித் தமிழகத்தினுள் நுழைந்தனர்

"தொண்டை மண்டலம், சோழ, பாண்டியநாடு ஆகியவற்றுள் ஒன்றேனும் களப்பிரரின் கொடுமையினின்று தப்பவில்லை. தமிழகத்திற்குக் களப்பிரர்களாலேற்பட்ட குழப்பமும் இழப்பும் அளவிறந்தன. இவர்கள் கொடுங்கோலர்கள்;

—(டாக்டர் கே.கே, பிள்ளை
தமிழக வரலாறு
மக்களும் பண்பாடும் எனும்
நூலில் பக்கம் 172)

களப்பிரரும் பல்லவரும்

"களப்பிரர் அடிக்கடி பல்லவரோடு போரிட்டு வந்திருக்க வேண்டும். இவர்களைக் காஞ்சியினின்றும் துரத்தித் தொண்டை மண்டலம் முழுவதையும் கைப்பற்ற இடைக்காலப் பல்லவரும் இடருற்றவராதல் வேண்டும்.

(டாக்டர்
எஸ். கே. ஐயங்கார்
'காஞ்சிப் பல்லவர்கள்'
பக்கம் 22)

இதிலிருந்து களப்பிரரிடமிருந்து நாட்டைக் கவர பல்லவர்கள் முயன்றதை அறிய முடிகிறது

சிம்மவிஷ்ணு

(கி. பி. 575 — 615)

"பல்லவகுலம் என்ற உலகைத் தாங்கும் குலமலை போன்ற வீரத்தில் இந்திரனையும் செல்வவத்தில் குபேரனையும் ஒத்தவன் சிம்மவிஷ்ணு"

[மத்தவிலாசம் சமஸ்கிருதம் பக்கம் 3)

இவன் களப்பிரரை ஆறும் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் முறியடித்ததை வேலூர் பாளையப் பட்டயமும், இரண்டாம் நந்திவர்மன் காலத்து காசக் குடிப்பட்டயமும் இலக்கியச் சான்றும் உறுதிப்படுத்துகின்றன.

சிம்மவிஷ்ணுவின் பெயரனை முதலாம் நரசிம்ம வர்மனும் [கி. பி. 630 – 660] களப்பிரரைப் போரில் முறியடித்தான்

இரண்டாம் நந்திவர்மப் பல்லவன் களப்பிரருடன் போரிட்டு வென்றானென்பதை அவரது புல்லலூர்ச் செப்பேடுகளும் [சுலோ 6] பட்டத்தாள் மங்கலம் செப்பேடுகளும் [சுலோகம் 9] கூறுகின்றன (விவரிக்கின்பெருகும்)

களப்பிரரும் பாண்டியரும்

கடுங்கோனுக்கு முன்னும், சங்கத்தில் பாரத பாடப்பட்டதற்குப் பின்னும் பாண்டியநாடு களப்பிரர் ஆட்சியில் முந்நூறு ஆண்டுக் காலம் இருந்ததென்று கேள்விக்குடி சின்னமனூர்ப் பட்டயங்கள் உறுதிப்படுத்துகின்றன.

செங்கை
செ. திவான்

களப்பிரர் பாண்டிய நாட்டை கடைச் சங்கத்தின் இறுதிக்காலமான கி. பி 250 இல் கைப்பற்றினர்.

மூர்த்தி நாயனார் காலத்தில் கருநாடக வேந்தன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றி அரசாண்டானென்று பெரிய புராணம் சொல்கிறது. "ஓதம் தழுவியஞாலமெல்லாமொரு கோவில் வைத்தான்; கோதைநெடுவேல் களப்பாளன் ஆகிய கூற்றுவனே யென்று நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் தொகையில் குறிப்பிடும் கூற்றுவநாயனாரும் களப்பிரரே. 'கொடும்பாளூரை ஆண்ட குறுநில மன்னரான இடங்கழி நாயனாரும் இம்மரபினரே'

பாண்டியன் கடுங்கோன்

"களப்பிரனென்னுங் கலியரசன் கைக்கொண்டதனை இறக்கியபின் படுகடன் முனைத்த பருதிபோற் பாண்டியாதிராரான் வெளிப்பட்டு" என்று கடுங்கோனைப் பற்றி வேள்விக்குடிச் செப்பேடு குறிக்கிறது. இதை களவாய் புரத்துச் செப்பேடு வலியுறுத்துகிறது.

கி. பி. 575 இல் கடுங்கோன் களப்பிரரை விரட்டிப் பாண்டியர் ஆட்சியை நிலைநாட்டினான்'

(டி. வி. சதாசிவப் பண்டாரத்தார். பாண்டியர்கள் பக்கம் 103]

இவ்வாறு பாண்டியர்கள் களப்பிரரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினர்.

களப்பிரர்களும் சோழரும்

சோழன் கரிகாலனுக்குப் பின் வந்த சோழர்கள் களப்பிரர் ஆட்சியின் கீழ் ஒளிமங்கி இருப்பிடம் தெரியாமல் உறையூரில் ஒடுங்கிக் கிடந்தனர். பல்லவரும், பாண்டியரும் களப்பிரரைமுறியடித்துத் தத்தம் நாடுகளை மீட்டுக் கொண்டனராயினும் சோழர்கள் மட்டும் தலைதூக்காமலே சில நூற்றாண்டுகளைக் கழித்து வந்தனர். காலப் போக்கிலேற்பட்ட திருமணத்தொடர்புகளைக் கொண்டு சோழர்கள் இழந்து போனசெல்வாக்கைச் சிறிது சிறிதாக மீட்டுக் கொண்டு வந்தனர். இந்நிலையில உறையூருக்கு அண்மையில் குறுநிலமன்னராக காலங் கடத்தியவன் விசயாலயச் சோழன்.

தமிழக வரலாற்றிலே ஈடிணையற்றபெரும் புகழை ஈட்டிக்கொண்ட, சோழப் பேரரசபரம்பரையொன்றைத் தோற்றுவித்த விசயாலயச் சோழன் (கி பி. 850 – 71) தஞ்சையைக் கைப்பற்றித் தன் வெற்றியின் சின்னமாக 'நிசும்பசூதினி' என்ற கோயிலை எழுப்பினான்.

(சௌத் இண்டியன் இன்ஸ்கிரிப்ஷன் பக்கம் 3 எண் 305)

இவ்வாறு பல்லவ பாண்டிய சோழர்மன்னர்கள் மீண்டும் தத்தம் ஆட்சியை நிறுவினாலும் இடையிலேற்பட்ட களப்பிரர் ஆட்சியால் கன்னித்தமிழகம் என்ன ஆயிற்று?

விளைவுகள் வேதனைகள்

"அரசு மொழி வேறொரு மொழியாகப் போய்விடவே நம் தாய் மொழியாகிய தமிழ் ஆதரப்பாரற்று வீழ்ச்சியடைந்தது, தமிழ்க்கலை தமிழ் நாகரீகம், பிற சிறந்த பண்புகள் ஆகிய எல்லாம் சிதைந்தழிந்து போயின'... இக்களப்பிரரது படையெழுச்சியினால் மதுரை நகரில் தமிழாராய்ச்சி செய்து கொண்டிருந்த கடைச் சங்கமும் அழிந்து போய் விட்டமை அறியத்தக்கது களப்பிரர் ஆட்சியால் ஏற்பட்ட தீமைகளுள் இதனினுங் கொடியது வேறில்லை எனலாம். களப்பிரர்களது ஆட்சிக்காலம் ஓர் இருண்ட காலம்

(—ஆராய்ச்சிப் பேரறிஞர் டி. வி: சதாசிவப் பண்டாரத்தார்.
பாண்டியன் வரலாறு
பக்கம் 35)

'களப்பிரர்கள் தமிழ் மன்னர்கள் செய்த தானங்களையெல்லாம் நடவாமல் தடுத்துப் பறித்துத் தம் சமயத்துக்குக் கொடுத்தனர்''

—(தமிழ்நாடும் களப்பிரர் ஆட்சியும் எனும் நூலில்
இரா. பன்னீர் செல்வம்
எம். ஏ
(பக்கம் 53)

''களப்பிரர்களால் தமிழகத்திற்கேற்பட்ட குறை பண்டைத் தமிழர் உயர் நாகரிக மரபும் பண்பாட்டு மரபும் இன்றுவரை முற்றிலும் மீளமுடியாமல் தடுமாறிப் போனதேயாகும்'

[பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை எம்.ஏ.எல்.டி
தென்னாட்டுப் போர்க்களங்கள் பக்கம் 115

சங்க கால நாகரிகம் நசித்து வீழ்ச்சிஅடைந்தது கிப்பன் கூறுவது போல் ரோம் சாம்ராஜ்யவீழ்ச்சிக்குக்காரணமான காட்டுமிராண்டித் தனமாகும், தமிழகத்தில் தலைவிரித்தாடிய களப்பிரர் ஆட்சிக் காலக் காட்டுமிராண்டித்தனம் சங்க கால நாகரீக வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று.

தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சியின் விளைவு பற்றி என். சுப்பிரமணியம் எழுதிய தமிழக வரலாற்று நூலில் மேற்கண்டவாறு உள்ளது.

இவ்வாறு களப்பிரர் ஆட்சியால் தமிழரின் கலை, பண்பாடு, கலாச்சாரம் மொழி நாகரிகம் முதலான அத்தனையும் நசிந்துபோன வேதனையை நம்மால் அறிய முடிகிறது.

களப்பிரர் அரச பரம்பரையினர் அல்லரேனும் சந்தர்ப்பமும் சமயமும் தமிழ் நாட்டுக்கு அண்மையில் அவர்கள் இருந்த நிலையும் அவர்களைத் தமிழ் நாட்டு அரசர் வரிசையில் சேர்க்கும் நிலையில் வைத்துவிட்டன என்ற கூற்றினை எண்ணி வேதனைப் படாமம் இருக்க முடியவில்லை.

—(அ. மு. பரமசிவானந்தம்
தமிழக வரலாறு பக் 177)

மூவேந்தர்கள் இவ்விருண்ட காலத்தில் தூசு படிந்திட்ட ஓவியமாய், குடத்திலிட்ட விளக்குகளாய், நீறு பூத்த நெருப்பாய் தம் நிலை மங்கி, ஒடுங்கி; களப்பிரருக்கு இடங்கொடுத்ததால், தமிழரின் கலை. கலாச்சாரம் நாகரிகம், பண்பாடு மொழி அத்தனையும் நசித்து போயிற்று. அது போன்றதோர் நிலை அண்மைக் காலமாய் அன்னைத் தமிழகத்திற்கேற்பட்டிருக்கிறதை அறிவோம்.

இருண்ட காலமாகிப் போன அந்தஇழிநிலை இன்னுமொரு தடவை இங்கு வரவேண்டுமா? கூடாது! கூடாது என்னருந் தமிழ்ச் சாதியே.

எண்ணிப்பார்'

தமிழ்ப்பகைவன் தமிதகத்தின் முதலமைச்சராய் வருதல் தடுத்தல் வேண்டுமெனறு முழங்கிய புரட்சிக் கவி பாரதிதாசனின் மொழியை உண்மையாக்கிட வேண்டாமா? உண்மைத் தலைவன் — தமிழரை உயர்த்தவந்த தலைவன் கலைஞரின் கரத்தினைப் பலப்படுத்துவோம்.

களப்பிரர் ஆட்சியும்!

தூக்கு மரத்தின் நிழலில்....

பூட்டோ !

அனைத்துலக அரசியல் தலைவர்களின் இரக்கத்திற்கு இன்று ஆளாகியிருக்கும் மனிதர் !

"இந்தியாவோடு ஆயிரமாண்டுப்போர் நிகழ்த்துவேன்'' என்று பாகிஸ்தானின் அதிபராக இருந்து ஒரு காலத்தில் முழங்கிய இவரின் நாட்கள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன.

கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களை மனதில் கொண்டு இன்று பூட்டோ மீது கவிழ்ந்துவரும் மரண மேகத்தைக் கண்டு யாரும் மகிழ்வெய்த முடியாது

கொலைக் குற்றமிழைத்தவனையே தூக்கிலிடும் செயல் அநாகரிகமானது என்ற கருத்து உலகம் முழுவதும் பரவிக்கொண்டிருக்கும்போது—

அரசியலில் வேண்டாதவரைக் 'களை' எடுக்க, அவரைத் தூக்கிலிட முனையும் செயலை எத்தன்மையானது என்று விவரிப்பது ?

பாகிஸ்தானின் அதிபராக பூட்டோ இருந்தபோது பல தவறுகளை அவர் புரிந்திருக்கக் கூடும்; மறுப்பதற்கில்லை.

ஆனால் —

அவருக்கு முன் இருந்த அயூப்கான், யாகியாகான் போன்றவர்களோடு ஒப்பிடும்போது - பூட்டோ ஜனநாயகத்தின் மீது சிறிதேனும் நம்பிக்கை கொண்டவர் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்தியாவோடு நட்புறவை ஏற்படுத்திக் கொள்ள – பின்னாட்களில் பூட்டோவுக்கு ஏற்பட்ட நல்ல மனமாற்றமே 'சிம்லா ஒப்பந்தம்' உருவாகவும் துணையாக நின்றது !

பூட்டோவிடமிருந்து ஆட்சியை ஜெனரல் ஜியா தலைமையிலான இராணுவம் கைப்பற்றியது சட்ட பூர்வமானதோ நேர்மையானதோ அல்ல; அவருக்கு விதிக்கப்பட்டிருக்கும் தூக்கு தண்டனைகூட சட்டபூர்வமானதோ நேர்மையானதோ அல்ல !

பாகிஸ்தானின் இன்றைய இராணுவ ஆட்சிக்கு ஜனநாயகத்தின்பால் ஈடுபாடு உள்ளதென்றோ, அந்நாட்டு மக்களின் உரிமைகளுக்கு அது மதிப்பளிக்கிறதென்றோ எந்த அரசியல் நோக்கரும் சொல்ல இயலாது.

ஏனென்றால் —

ஆட்சியைக் கைப்பற்றிய உடனேயே ஜியா, "விரைவிலேயே பொதுத்தேர்தல்கள் நடத்தப்படும்'' என்று வாக்களித்தார்; அவர் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு மாருக, தன்னுடைய அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார். இந்நாள்வரை அவரால் தூக்கிவிடப்பட்டவர்களின் எண்ணிக்கை தொண்ணூறு ! பூட்டோவைத் தூக்கிலிட வேண்டும் என்ற அவருடைய அவா, பழிவாங்கலின் உச்சகட்டமே ஆகும் !

ஒரு நாயைக் கொல்வதற்கு முன் அதற்கு வெறி பிடித்திருக்கிறது என்று சொல்வது போல்தான் பூட்டோவைப் பொறுத்தவரை சம்பவங்கள் அவருக்கு எதிராகத் திருப்பி விடப்பட்டன. இந்த அவல நாடகத்தின் அரங்கேற்றம்— பூட்டோ ஆட்சியிலிருந்தபோது தன் அரசியல் எதிரிகளைக் கொலைசெய்ய எத்தனித்தார்'' என்ற குற்றச்சாட்டுடன் கூடிய முதல் காட்சியோடு துவங்கியது. வழக்கை விசாரித்த நீதிமன்றங்களின் நோக்கம்—நீதியை நிலைநாட்டுவதல்ல — ஜியாவின் ஆசையை நிறைவேற்றுவதே! எனவே இறுதித்தீர்ப்பு என்னவாக இருக்குமென்று எடுத்த எடுப்பிலேயே எல்லோருக்கும் தெரிந்திருந்தது.

ஏனென்றால் —

இந்த வழக்கின் விசாரணைகளிலும், இறுதித் தீர்ப்பிலும் எத்தனையோ 'ஓட்டை. உடைசல்கள். சந்து பொந்துகள் இருப்பதை வழக்கறிஞர்கள் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஆயிரமாயிரம் குற்றச்சாட்டுகளை வலியச் சுமத்தி, பூட்டோவுக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை நியாயப்படுத்த என்னதான் ஜியா முயன்றாலும் —

பாகிஸ்தான் மக்களிடையே பூட்டோவுக்கு இருக்கும் தனிப்பெரும் செல்வாக்கை மங்கச் செய்துவிட இயலாது !

ஒரு பக்கத்துநாட்டு விவகாரங்களில் தலையிடுவது அத்துமீறலான விஷயம் என்றபோதும், பூட்டோவுக்கு விதிக்கப்

பட்டிருக்கும் தூக்குத் தண்டனையை இரத்துச்செய்ய வேண்டும் என்று குரல் எழுப்புவதானது மனிதாபிமானமுள்ள அனைத்துலகச் சோதரர்களின் கடமையாகும்.

ஒரு காலத்தில் —

இந்தியாவில், இந்தித் திரைப்படங்களில் நடிக்க வாய்ப்புத் தேடி அலைந்த பூட்டோ — நடிப்பதற்தேற்ற முகம் இல்லாதவர் என நிராகரிக்கப்பட்ட பூட்டோ — தன்னுடைய அறிவாற்றலாலும் திறமையாலும் பாகிஸ்தானின் அதிபரானர்.

அந்த மனிதர் —

இன்று சாவு தன்னை நெருங்கிக் கொண்டிருக்கும் போதும்கூட —

மனந்தளராது — உறுதியோடு நிற்கிருர் !

உயிர்ப்பிச்சைக் கேட்டு மண்டியிடவில்லை அவர் ! தனக்காகக் கருணை காட்டச் சொல்லி யாரிடமும் மனுவை நீட்ட வேண்டாம் என்று தம் மனைவிக்கும், மகளுக்கும் கட்டளையிட்டுள்ளார்.

பூட்டோவின் மனைவி நஸ்ரத் பேகம். கணவனுக்கு விதிக்கப்பட்ட தண்டனையைக் கேட்டு கலங்கிவிடவில்லை; கதறிக் கண்ணீர் விடவில்லை "என் கணவனைக் கொன்ற பிறகு, எத்தனை நாட்கள் நீ உயிரோடு வாழ்ந்து விடுவாய் என்பதையும் பார்த்து விடுகிறேன்......'' என ஜியாவை நோக்கிச் சூளுரைத்துள்ளார் அந்த வீராங்கனை !

தனக்கு விதிக்கப்பட்டுள்ள

பழனி சித்தார்த்தன்

போலீஸ். இராணுவக் கட்டுப்பாடுகளையெல்லாம் தகர்த்தெறிந்து — காரிலேறித் தப்பிச்சென்று கணவரைச்சிறையிலேயே சந்தித்துள்ளார் !

வளர்ந்துவரும் — காலனி ஆதிக்கத்தை உடைத்தெறிந்து விடுதலைபெற்றுவரும் — மூன்றும் உலக நாடுகளுக்கு பாகிஸ்தான் இன்று ஒரு பாடம் புகட்டி வருகிறது —

நாடு இராணுவமயம் ஆகிவிட்டால் எந்தப் பிரச்னையும் இருக்காது. இலஞ்சம் இருக்காது; ஊழல் இருக்காது — என்பதெல்லாம் வெறும் கனவு மயக்கங்கள் !

ஒரு ஜனநாயக அமைப்பில் பல குறைபாடுகள் இருக்கலாம்; பல தவறுகள் நிகழலாம்; ஆனால் இந்தக் குறைபாடுகள் நீக்கப்படலாம் — தவறுகள் சரிசெய்யப் படலாம்.

ஒரு இராணுவ அமைப்பில் இது சாத்தியமல்ல; ஏனென்றால் இராணுவ அமைப்பென்பதே முழுக்க முழுக்கத் தவருனது; அபாயகரமானது !

மேலும் —

ஜனநாயகக் காற்றை சுவாசிப்பதனால் மட்டுமே சமத்துவமும், சகோதரத்துவமும் பூத்துச்குலுங்கும் சோசலிசப் பூங்காவில் உலாவரமுடியும் !

★

பெண்ணிடம் வீரம் காட்டும் பேடிகள்..!

குப்புசாமி என்பவர் போலீஸ் துறையில் டி.எஸ்.பி.யாக வேலை பார்த்து குப்பை கொட்டியவர். சரி, இப்போது அவருக்கென்ன கேடு வந்து விட்டது என்று கேட்கிறீங்களா ? அவருக்கு எந்த 'இழவும்' ஏற்படவில்லை, அடிப்பது, உதைப்பது, ஆட்களை மிரட்டுவது போன்ற 'போலீஸ் தனமான காரியங்களில் ஊறிப்போன அவரால் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு கைகால்களை வைத்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை.

எனவே

இப்போது அவராகவே பார்த்து ஒரு வேலையை எடுத்துக் கொண்டார்.

என்ன வேலை ?

வேலை நிறுத்தங்களை உடைப்பது — தொழிலாளர் தலைவர்களை ஆட்களை வைத்து உதைப்பது! முதலாளிகளின் கைகூலியாகத் திறம்படச் செயலாற்றும் இந்த 'அற்பப் பதர்' போலீஸ் துறையில் அதிகாரியாகப் பணியாற்றியபோது எப்படியெல்லாம் ஊரை அடித்து உலையில் போட்டிருப்பார் என்பது அந்த 'பகவானுக்கே' வெளிச்சம் ! இவரும், இவருடைய சகாக்களும் திருச்சியிலுள்ள ஒரு ஓட்டலில் குண்டர்கள் புடைசூழ, சோடா பாட்டில்கள், சைக்கிள் செயின்கள் போன்ற ஆயுதங்கள் சகிதம் முகாமிட்டிருக்கிருர்களாம். எதற்காக ?

மூடப்பட்டிருக்கும் திருச்சி சிம்கோ மீட்டர் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள், போராடி வருகிருர்கள்,

இந்தப் போராட்டத்தை முன்னின்று நடத்தி வருபவர், மார்க்ஸிட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான உமாநாத் அவர்களின் துணைவியார் திருமதி பாப்பா உமாநாத். அந்த அம்மையார் நீண்ட நாள் அரசியல் வாதி; தியாகங்கள் பல புரிந்தும் பலமுறை சிறையேகியும் கணவரோடு இணைந்து பொதுத்தொண்டாற்றி வருபவர்.

பதினைன்காம் தேதி இரவு பாப்பா உமாநாத்தின் வீட்டை நோக்கி குண்டர்கள் சோடாபாட்டில்களை வீசியிருக்கிருர்கள். உமாநாத் ஊரில் இல்லாத நேரம் பார்த்துக் கட்டவிழ்த்துவிடப்பட்ட இந்தத் தாக்குதல், பாப்பா உமாநாத்தைக் கொலை செய்யும் நோக்கம் கொண்டதாகும்!

ஒரு பெண்ணிடம் வீரம் காட்டும் பேடிகளைப் பிரஜைகளாய்ப் பெற்ற புனித இராஜ்யத்தில் தாய்க்குலம் படும்பாடு சொல்லத் தரமானதோ ?

★

திராவிட முன்னேற்றக கழகத்திற்காக ஆசிரியர் மு கருணாநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயண செட்டித்தெரு, இராயபுரம்-600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது நிர்வாக அலுவலகம் 'அன்பகம்' 508 அண்ணுசாலை, தேனும்பேட்டை சென்னை—600081
தொலைபேசி: 441009

வழி மறிப்புகளை விலக்குவோம்!

ஆழ்கடலுக்கு அடியில் சென்று மூச்சடக்கிப் பாய்ந்து முத்தெடுத்து வருகின்ற—உயிரைத் துச்சமென மதித்து ஒளி முத்தை ஏந்தி வருகிற — அவனின் உணர்வுகள்......முத்து மாலை சூடிப் படகுக்காரில் பவனிவரும் வனிதைக்குப் புரிபடாத ஒன்று.

துகள்களாகவும். படிவங்களாகவும் மண்ணில்புதைந்து கிடக்கும் பொன்னை வெளிக்கொணர்வதற்காகச் சுரங்கத் தொழிலாளி படும்பாடு — கறுப்பிலும் வெளுப்பிலும் கணவன் சேர்த்த செல்வத்தில் மாலை சூடி மகிழும் பெண்ணுக்குப் பிடிபடாத ஒன்று.

சிலர் சிந்தனைக்குச் சிறகு கட்டினாலும் அவ்வளவு ஆழத்திற்குச் செல்ல முடியாத அளவுக்கு அவர்களது அரைகுறை அனுபவம் தடுத்து விடுகின்றது. இன்னும் சிலருக்கோ சிந்திக்கவே நேரம் கிடைக்காத அளவுக்குப் பகட்டும் பரபரப்பும் மிக்க வாழ்க்கை கவனத்தை வேறு பக்கம் திசை திருப்பி விடுகின்றது.

அதற்காக—அந்த உழைப்பாளிகளின் ஆற்றல். துணிவு எல்லாம் உலகத்து அங்கீகரிப்பு பெறாமலேயே போய்விட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத வாதம். அவர்களுக்கு மரியாதை மறுக்கப்பட வேண்டும் என்பது வெறுக்கப்பட வேண்டியதாகும்.

ஒவ்வொரு கட்டத்திலும் பொன்னையும் முத்தையும் காணும் வேளைகளில்...அவற்றைத் திரட்ட—உழைத்து, அலுத்து, உருக்குலைந்த மனிதப் பிறவிகளின் வாடிய முகம் நினைவுக்கு வராமல்போனால்—நினைவுக்குக் கொண்டு வரப் படாமல் போய்விட்டால்... அதைவிட மோசமான நிலை ஏதுமில்லை.

இது சிலருக்குப் புன்முறுவலை வரவழைக்கலாம். ஆனால் அந்த முறுவல் எத்தனையோ எரிமலைகளை வெடிக்க வைத்துச் சமுதாய மாறுதலுக்குக் காரணமாக இருந்திருக்கின்றது. இது உண்மை. சான்றுகள் பல சரித்திர ஏடுகளில் உண்டு.

காரணம்—உழைப்பு. அது அங்கீகரிக்கப்படாமல் போனதே!

தொண்டாற்றல் அவமதிப்புக்கு ஆளாகின்றதா—அதைவிடச் சமுதாயத்தைக் கடைநிலைக்குக் கொண்டுவர எந்த நவீன ஆயுதமும் தேவையில்லை...அது போதும்!

உழைப்பு அர்த்தம் கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்படுகிறதா—போதும். அவலங்கள் தொடர்வதற்கு அதைவிட வேறு முன் அறிவிப்புத் தேவையில்லை.

தியாகம் கேலிகிண்டலுக்கு உள்ளாக்கப்படுகின்றதா—

அருணா சண்முகம்

முடிவு நிச்சயம் என்று முன்னெச்சரிக்கைச் சங்கு ஊதிவிடலாம்.

அன்று சிந்தனையாளன் சாக்ரடீசுக்குச் சின்னஞ்சிறு கிண்ணம் விஷம்...இன்றும் ஏதென்சு நீதிமன்றம் கண்காட்சிப் பொருள்—இதுதான் விடை.

ஒரு காலத்திலே என்று துவங்கித் தமிழ்நாடு என்று தொடர்ந்தால் என்னென்ன எழுதலாம் ஒன்றா இரண்டா அந்தத் தமிழ் மண்ணிலே பிறந்த பாவத்திற்காக—இங்கே உருவாக்கி வைக்கப்பட்ட கடவுளர்களுக்காக. அதற்கு அடிப்படை அமைத்துத்தந்த புராண இதிகாசங்கள் துணையால் குருட்டு மானிடராய் மத போதையில் கவிழ்ந்து கிடந்தவர்களை ஒருமைப்பாடு எனும் வசீகர கோஷத்தின் துணைகொண்டு பொது மொழி என்ற வஞ்சத் திட்டத்தால் இரண்டாந்தரக் குடிமக்களாக்கப் பட்ட மக்களை.....

விழிப்புணர்வு பெறச் செய்வதற்காக—அய்யாவும், அண்ணாவும் புரிந்த சமர்கள்—உயர்த்திய குரல்கள், இன்று பிடிபடாத — புரிபடாத சிலருக்கு இருக்கலாம். சிலருக்குப் புரியவில்லை என்பதற்காக உணர்வுள்ளவன் புதைந்து கிடக்கவேண்டும் என்பது அக்கிரமம்— அடிமுட்டாள்தனம்

அய்யா அண்ணா வழியில் நடைபோடும் கலைஞர், கொடியை உயர்த்தியபடியே குரல் கொடுத்து வருகின்றார். உரிமைக்குக் குரல் தந்ததற்காகக் கடந்த காலத்திலும் தருவதற்காக நிகழ் காலத்திலும், அவர் ஏற்று வரும் அல்லல்கள்...இந்தத் தலைமுறையில் எந்தத் தலைவர்களும் எதிர் நோக்காதவை

அவற்றையும் துச்சமென மதித்து அவர் ஆர்ப்பரித்து வருகிறார் என்றால், தமிழ்ச் சமுதாயத்தின் மீது தளராத நம்பிக்கை வைத்திருக்கிறார் என்று தானே பொருள்

பதவிக்காகப் பல்லிளித்து வலம் வந்தவர்கள்—தேவைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகத் தூபதீப ஆராதனை செய்தவர்கள் 'பா'ப் புனைந்து காதலியாக, கட்டிக் கொண்டவளாக அரங்கேற்றியவர்கள்—அடுத்துக் கெடுப்பவர்கள்......எல்லாம் பறந்த பின், எனக்கு மக்கள் மன்றம் இருக்கின்றது, என்ற நம்பிக்கையில் தானே: அவர் கருத்து மாறுதலுக்காக கன்னித் தமிழ் நாட்டைச் சுற்றிச் சுற்றி வருகின்றார்.

கவர்ச்சி மாயை குலைந்து விடுமோ என்ற பதை பதைப்பில்- கருத்து அரசியல் நிலை கொண்டு விடுமோ என்ற பதை பதைப்பில் — சோரம் போனவர்கள் சேற்றை வாரி இறைத்து வரும் இந்த வேளையில்...... அவருடைய நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டியது தமிழ்ச் சமுதாயத்தின் கடமைப் பொறுப்பு.

இன்று அதிலிருந்து தவறினால் இன்னும் ஒரு தலைமுறை இரண்டு தலைமுறைக்கு எழ டியாமல் — எடுப்பார் கைப் பிள்ளையாய் ஏனோ தானோவாய்த் தமிழகம் கதறல்களில் காலத்தைக் கழிக்க வேண்டியிருக்கும்-கலக்கத்தை மெல்ல வேண்டியிருக்கும்.

விழிக்குமா தமிழகம்—வெளிச்சத்திற்கு வருவார்களா தமிழ்ச் சோதரர்கள்... இதுதான் தமிழுணர்வு மிக்கவர்களின் தவிப்பு...ஏக்கம்... எதிர்பார்ப்பு...எல்லாமும்.

எத்தனை வழக்குகள்—எப்படிப்பட்ட தாக்குதல்கள் எத்தகு துரோக ஈட்டி முனைத் தாக்குக்கள் தாங்கிக்கொண்டு தானே—இதழ் குவிய, இயக்கப் பணி தொடங்குகின்றார்.

நேற்று வரை கூட இருந்தவர்கள் இன்று சொல்லம்பு தொடுத்து இதயத்தைக் கீறினாலும்.—

என் வாழ்வின் முதல் பாதிக்குப் பெற்றவள் அடுத்த பாதிக்கு அன்னை இவர்தான் என்று எழுதிவிட்டு...இன்று களங்கம் கற்பிப்பவர்கள் 'வரை' கடந்தாலும்—

இமயம் போல் நிற்கிறார். இதயம் நெகிழச் சொல்லி வைக்கிறார் 'என்னை வாழ்த்திப் பதவி பெற்றவர்கள், வசை பாடியும் பெறத் தெரிந்து கொண்டார்கள், வாழ்த்துகிறேன்' என்ற அர்த்தத்தில்

அவர் தாங்கிக் கொள்ளலாம்—தமிழ்ச் சமுதாயம் அவர்களைத் தரம் பிரித்துக் கொண்டிருக்கின்றது.

இந்த உணர்வு மிக்க அணியுடன் ஒட்டு மொத்தத் தமிழனும் இணையும் நாள் எந்நாள்!

அது அவலங்கள் கழியும்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

இங்கிலாந்தில் இந்தியர்கள் படும்பாடு!

இங்கிலாந்திலுள்ள "நேஷனல் பிரண்ட்" என்னும் தேசிய முன்னணியின் நடவடிக்கைகளைக் குறித்து ஆறு மாத காலமாகப் புலனாய்வு நடத்திய கிரானடா தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வுக்குழு சில மாதங்கட்குமுன் ஒலிபரப்பிய 'இயங்கும் உலகம்'' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில், முன்னணியை ஒருநாஜிக் கட்சி எனப்பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இங்கிலாந்து முழுவதிலும் உள்ள தேசிய முன்னணி உறுப்பினர்கள் பலரும் ஆசிரியர்களையும் மற்றும் இங்கிலாந்தில் குடியேறி வசித்து வருபவர்களையும் "துன்புறுத்துவதும், பயமுறுத்துவதும் சில சமயங்களில் பீதியுற அடிப்பதும் தமது எழுதாக் கிளவியான கொள்கையாகும்'' என்று ஒப்புக் கொண்டுள்ளதாக அந்த நிகழ்ச்சி தெரிவித்தது. மேலும் தமது பெயரை வெளியிட விரும்பாதவரும் போலீஸ் இலாகாவின் உணவுத் துறையைச் சேர்ந்தவருமான நம்பிக்கைக்குரிய அதிகாரி ஒருவர், தேசிய முன்னணியில் தீவிரமாகச் செயல்பட்டு வரும் "செயல் வீரர்கள்'' தம்மிடம் பின்வருமாறு கூறியதாகவும் அந்த நிகழ்ச்சி தெரிவித்தது

"இங்கிலாந்தில் குடியேறியவர்களை நாங்கள் அவர்களது தாடகத்துக்குத் திருப்பியனுப்பப் போவதில்லை. ஏனெனில் ஹிட்லர் யூதர்களைக் கொன்று தள்ளியதுபோல் அவர்களை இங்கிலாந்திலேயே கொன்று தள்ளுவதுதான் மலிவான காரியமாக இருக்கும்''

அந்த அதிகாரி பின்வரும் தகவலையும் தெரிவித்திருக்கிறார்.

"நான் சந்தித்துப்பேச நேர்ந்த தேசிய முன்னணிக் கட்சி அதிகாரி ஒருவரது மேஜையின்மீது சிலுவைக்குறிகள் நிறைந்திருந்த ஒரு தரைப்படம் கிடந்தது. அந்தச் சிலுவைக்குறிகள் யாவும் எங்கெல்லாம் அவர்கள் சித்திரவதைக் கொட்டடிகளைத் தொடங்க உத்தேசித்துள்ளார்கள் என்பதைக் குறிப்பதாக அந்த அதிகாரி என்னிடம் கூறினார். மேலும் நான் சென்று பார்த்த அவர்களது கூட்டங்களிலெல்லாம் ஜெர்மன் போர்ப்பரணிப் பாடல், ஹிட்லரின் பேச்சுக்கள் ஆகியவற்றின் ஒலிப்பதிவுகள் ஒலிபரப்பப்பட்டன. தேசிய முன்னணியின் அதிகாரிகள் தேசிய அளவிலும் சரி, பிரதேச அளவிலும் சரி தாம் நாஜிக் கருத்துக்களைக் கொண்டு இருப்பதை ரகசியமாக என்னிடம் ஒப்புக்கொண்டனர். சிலர் ஹிட்லரைப் பகிரங்கமாகவே வியந்துபாராட்டுகின்றனர்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தேசிய முன்னணியின் இன்றைய தலைவரான ஜான் டிண்டால், பத்தாண்டுகளுக்கு முன்னால் அமெரிக்காவிலுள்ள பிரசித்தமான நாஜிகள் சிலருக்கு எழுதிய கடிதங்களையும் அம்பலப்படுத்தியது. அந்தக் கடிதங்கள் ஒன்றில் அவர் இவ்வாறு எழுதியிருந்தார்: "பகிரங்கமான நாஜிமுத்திரையைக் கொண்ட ஓர் இயக்கம் இங்கிலாந்திலோ அல்லது அமெரிக்காவிலோ நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என நான் கருதவில்லை.''

தேசிய முன்னணியின் நடவடிக்கைகளைப் பற்றி ஏற்கெனவே அறிந்தவர்களுக்கு இந்தத்தொலைக்காட்சி நிகழ்ச்சி தெரிவித்துள்ள விஷயங்கள் அதிர்ச்சி தருவதாகவோ விசித்திரமானதாகவோ தோன்றாது. இந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சி சாடிய குற்றச்சாட்டை "அபத்தமானது'' என்றும், தேசிய முன்னணி வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறுவதெல்லாம் "வெறும் கட்டுக்கதை'' என்றும் தேசிய முன்னணியைச் சேர்ந்த தலைவர்கள் மறுக்க முயன்றுள்ளபோதிலும் வெள்ளையர்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட, வெளிப்படையான நிறவெறித் தன்மையைக் கொண்ட, இந்த முன்னணி, அது நடத்திய நிறவெறிப் பேரணிகள் வெளியிட்ட நிறவெறி மிக்க அறிக்கைகள், மற்றும் ஆயுதந்தாங்கிய தனது குண்டர்கள் கூட்டத்தின் மூலம் வெள்ளையரல்லாத நிறத்தவர்கள் மீது தொடுத்த தாக்குதல்கள் ஆகியவற்றின் மூலம் ஏற்கெனவே தன் சுயரூபத்தைப் புலப்படுத்தியுள்ளது.

இதன் விளைவாக, உண்மையில் இந்த முன்னணியானது இப்போது இங்கிலாந்தில் வசித்துவரும், உழைத்துவரும் 17 இலட்சம் வெள்ளையரல்லாதவருக்கு குறிப்பாக ஆசியர்களுக்கு ஏற்கெனவே ஒரு பயங்கரக் கனவாக அவர்களது பாதுகாப்புக்கு ஓர் ஆபத்தாக விளங்கி வருகிறது.

—தொ. மு சி. ரகுநாதன்

நன்றி "விடுதலை''

நெற்களம் போர்க்களம் ஆகிறது

'நாங்கள் சேற்றில் கால் வைத்தால்தான் நீங்கள் சோற்றில் கைவைக்க முடியும்'' என்னும் உழவனின் மதர்ப்பு இன்று எத்தனை பரிதாபகரமாக ஆகி விட்டது! காடு வெட்டி கழனி திருத்தி வீடு நிறைத்திட்ட அந்த விவசாயி இன்று வீதிக்கு வந்து விட்டான். உழைத்து. உழைத்து உயிர் கொடுத்தவன்: இன்று உரிமைக்குக் குரல் கொடுக்கிறான். 'யார் ஆண்டால் என்ன? எவர் ஆண்டால் என்ன? நாம் உண்டு, நம் தொழில் உண்டு' என்றிருந்தவனுக்கு பாகு படுத்திப் பார்க்கும் வாய்ப்பை இன்று கொடுத்திருக்கின்றார்கள். ஊரார் வயிறு நிரம்ப உணவளித்தவனின் வயிற்றில், ஓங்கி அடித்து விட்டிருக்கிறார்கள்! இன்றைய ஆட்சியாளர்கள், உழவன்தான். உழைத்து உண்டு வாழ்பவன்; மற்றவர்கள் அவன பின் செல்பவர்கள் 'விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு என்றெல்லாம் புகழாரங்களைக் குறைவில்லாமல் சூட்டியவர்கள் துன்பங்களையும் குறைவில்லாமல் கொடுத்து அவருடைய வாழ்வை நிறைவில்லாமல் கெடுத்திருக்கிறார்கள்.

இவற்றின் எதிரொலியைத்தான் சென்ற சில நாட்களாக சோற்றுல் மடை அடைத்த சோழ மண்டலத்தில் கண்டு வருகிறோம். கொடுமையைக் கண்டு பொங்கி யெழுந்து போர்க் கொடி உயர்த்தும் ஏனைய தமிழக விவசாயிகளின் கடலில். பெருங்கடலென தஞ்சை விவசாயிகள் சங்கமித்துள்ளனர். ஊர் ஊராக விவசாயிகள் பெருமளவில் கூடி, ஊரே வியக்கும் வண்ணம் பெரும் பேரணிகளை நடத்துகின்றார்கள். தஞ்சை விவசாயிகளிடையே பெரும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருப்பதற்கு சான்று கூறுகின்றன இந்நிகழ்ச்சிகள். சென்ற ஏழாம் தேதி மாயூரத்தில் நடந்த பேரணியை யொட்டிய மாநாட்டில் தமிழக சட்ட மன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் கலந்து கொண்டார். பேராவூரணியில் நடந்த பெரும் பேரணியை யொட்டி நடைபெற்ற மாநாட்டை மேலவை எதிர்க் கட்சித் துணைத் தலைவர் கோ. சி. மணி துவக்கி வைத்திருக்கிறார். மாவட்டச் செயலாளர் தாழை மு. கருணாநிதியும், பிற இயக்கங்களைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டிருக்கின்றார்கள்.

தஞ்சை விவசாயியை எதிர் நோக்கியிருக்கும் பிரச்சினைகள் எண்ணற்றவை. சிறு குண்டூசியிலிருந்து, பெரும் பொருள் வரை கணிசமான அளவுக்கு விலை ஏறி இருக்கும் இந்நாளில் ஏறாமல், ஆனால் இறங்கும் திறன் நெல் ஒன்றுக்கு மட்டுமே இருக்கின்றது! விவசாயிகளுக்கு நியாயமான கட்டுப்படியாகும் விலை கிடைக்க ஆவன செய்யவில்லை இந்த அரசு. நெல் விளைச்சலின் ஒவ்வொரு கட்டத்திலும் அதிகச் செலவினை விவசாயி ஏற்க வேண்டியிருக்கிறது உரம் பூச்சி மருந்து முதலியன முன்பு எப்போதையும் விட அதிகமான அளவுக்கு விலை உயர்ந்து நிற்கின்றது. ஆனால் நெல்லின் விலை முன்பு எப்போதும் இல்லாத அளவுக்குத் தாழ்ந்து நிற்கின்றது.

அரசின் கணிப்பின்படி ஒரு குவிண்டால் நெல் உற்பத்தி செய்ய சுமார் 117 ரூபாய் ஆகின்றது. ஆனால் அரசு நிர்ணயித்துள்ள விலை ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் எண்பத்தைந்துதான், எண்பத்தைந்து ரூபாயைச் சம்பாதிக்க ஒவ்வொரு விவசாயியும் சுமார் 117 ரூபாய் முதலீடு செய்யும் இந்த விந்தையை என்னவென்று சொல்வது? எப்படிச் சீரணிப்பது?

இன்னொரு வேடிக்கை! இதைவிடக் குறைவான உற்பத்திச் செலவைக் கொண்டுள்ள கோதுமையின் நிர்ணயிக்கப்பட்ட விலை சுமார் 120 ரூபாய்! கோதுமைக்கு மத்திய அரசு தரும் மானியமே இதற்குக் காரணமாகும். ஆனால் இதனை மட்டும் சுட்டிக்காட்டி விட்டு மாநில அரசு கை கழுவிச் சென்றிட முடியாது. மாற்று வழிகளை. முன்னர் கழக அரசு செய்ததுபோல் செய்திட வேண்டும். கழக ஆட்சிக் காலத்தில், மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு மேலாக விவசாயிகளுக்கு வரு

வீரசோழன்

மானம் கிடைக்க வழி இருந்தது மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு மேலாக வண்டிச் சத்தம் என ரூபாய் பதினைந்தை கலைஞர் வழங்கினார்: அதுமட்டுமா! ஊருக்கு ஊர், நுகர் பொருள் வழங்கு துறை வழியாக நெல்லினை அரசே நியாய விலைக்கு வாங்கியது இடைத் தரகர் முறை அறவே ஒழிக்கப்பட்டது. விளைந்த நெல்லின் ஈரம் உலர்வதற்கு முன்னேயே அதனைப் பணமாகக் கண்டார்கள் விவசாயிகள். தஞ்சை விவசாயிகளின் வாழ்க்கையில், நெல்லைப் போட்ட உடனேயே பணத்தைக் கண்ட நிலை அந்த ஒரு காலத்தில் மட்டும்தான் இருந்தது என்பதை எந்த விவசாயும் மறக்கமாட்டான் அதனால்தான் தஞ்சை விவசாயிகள் இன்றும் கலைஞரை நன்றியுடன் போற்றுகிறார்கள்.

.977 ஆம் ஆண்டு மத்திய அரசு நாடு முழுவதும் ஒரே உணவு மண்டலமாக ஆக்கி. நாடு முழுவதும் உணவுப் பொருள் தாராளமாகச் செல்ல வழி எற்படுத்தியது. அந்தச் சமயத்தில் கூடத் தமிழக அரசு தஞ்சை மாவட்டத்தில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருந்தது. அண்டை மாவட்டத்துக்குக்கூட செல்ல முடியாத நிலையினை ஏற்படுத்தியிருந்தது. இதனால் நெல் தஞ்சையிலேயே தேங்குகிறது. பயனாக விலை மிகவும் சரிகின்றது.

இதையெல்லாம் மீறி தஞ்சை விவசாயிகளிடம் கொஞ்சம் உயிர் இருக்குமேயானால் அதனைப் பறிப்பதற்கென கூட்டுறவுக் கடன்கள் காத்திருக்கின்றன. பல்வேறு காலக் கட்டங்களில். அரசு. விவசாயிகளின் குறுகிய காலக் கடன்களை, நீண்ட காலக் கடன்களாக ஆக்கி, அவற்றுக்கு வட்டி கூடுதல் வட்டி, அபராத வட்டி முதலியன போட்டுத் திரும்பக் கட்டவே இயலாத ஒரு பெருஞ்சுமையாக ஆக்கி வைத்திருக்கிறார்கள். இதனால் ஒரு ஏக்கருக்கு நிலுவை சுமார் ரூ 400 வரை இருக்கின்றது. இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில் ஒரு விவசாயியின் கடன் சுமை, அவனுடைய நிலத்தின் மதிப்பை மிஞ்சி, விழுங்கி நிற்கிறது!

நெருக்கடிக் காலத்தில் போடப்பட்டு ஆனால் இந்நாள் வரை வசூலிக்கப்படாமல் அதே நேரத்தில் ரத்தும் செய்யப்படாமல் இருக்கின்ற வரிகள் மற்றொரு பிரச்சினையாகும். சிறப்புத் தண்ணீர்த்தீர்வையென ஏக்கருக்கு 20 ரூபாயினை ஆண்டுக்கு மூன்று முறை வசூலிக்கிறார்கள் அதிலும் பருத்தி, கரும்பு போன்ற பணப்பயிர்களுக்கு இரட்டிப்பு மடங்கு வசூலிக்கிறார்கள். இதனைத் தற்சமயம் அதிகரிக்க எண்ணியுள்ளார்கள். விவசாய வருமான வரியும் அதிகப்படுத்தப்படஇருக்கிறது. சென்ற மூன்றாண்டுகளாகப் பல்வேறு காரணங்களுக்காக ஒத்திப் போடப்பட்ட ஆனால் ரத்து செய்யப்படாத மூன்றாண்டு பசலி பாக்கியும் இவ்வாண்டே வசூலிப்பதென முடிவு செய்திருப்பது இன்னொரு பேரிடியாகும். இவ்வாண்டும் வெள்ளபாதிப்பு அதிகமாக இருந்ததை ஏனோ மறந்து விட்டார்கள். இதைத் தவிர நிலவரி, பஞ்சாயத்து வரி, செஸ், சிறப்பு வரிகள். வீட்டு வரிகள் முதலியன வேறு காத்திருக்கின்றன. இவற்றையெல்லாம் எங்கிருந்து கொடுப்பது? எப்படி கொடுப்பது? ஆகவேதான் வரி கொடா இயக்கம் என முடிவு செய்திருக்கிறார்கள்.

இவ்வளவு சிரமங்களுக்கு இடையில் விவசாயம் அவசியம் செய்யத்தான் வேண்டுமா? என நம்மில் பலர் சந்தேகம் எழுப்பலாம். என்ன செய்வது? அவர்களுக்குத் தெரிந்தது எல்லாம் அந்தத் தொழில் ஒன்றுதான். மானம், மரியாதை, கொள்கை குறிக்கோளையெல்லாம் சொகுசான (நிலையற்ற) வாழ்க்கைக்கு முன்னே பலியாக்கிவிட்டு, நினைத்த போதெல்லாம் கட்சி மாறும் 'அழுக்கு மன அரசியல்வாதிகள்' போன்றவர்களல்லர் அவர்கள். தானும் வாழ்ந்து தன்னைச் சார்ந்தோரையும் வாழவைக்கும் ஒப்புயர்வற்ற உழவுத் தொழில் ஒன்றே அவர்களின் உயிர்நாடி.

வழி மறிப்புகளை விலக்குவோம்!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நாள்.

அது தமிழன் தலை நிமிரும் நாள்.

அந்த நாளைச் சொந்த மண்ணின் சோதரர்கள், மட்டும் அல்ல—உலகெங்கும் பரவிக் கிடக்கும் தமிழ் நெஞ்சங்களும் வரவேற்பதற்காக விழி உயர்த்தி நிற்கிறார்கள்.

எந்த எழுச்சியை உருவாக்குவதற்காக அய்யா குரல் கொடுத்து வந்தாரோ—

எந்தப் பொற்காலம் மீள அண்ணா கொடி உயர்த்தி அணி வகுத்தாரோ—

அவர்களின் குறிக்கோளை அடைவதற்காகக் களத்திலேயே நிற்கும் கலைஞரை—அவரது தொண்டாற்றலை, குறைத்துக் கூறும் தரங்கெட்ட அரசியல் வியாபாரிகளின் வேடங்கள் கலைக்கப்பட வேண்டும்.

தேர்தல் வரவு செலவுகட்கு அப்பாற்பட்ட நிலையில் சிந்திக்க மக்களைத் தூண்ட வேண்டுவது அவசியம். தேர்தல்கள் வெறும் ஐந்தாண்டுக் கால இடை வெளிக்குள்—கோட்டையில் நின்று தடுத்துக் கொள்ளத் தரபடும் கேடயம்.

அப்பால்—பிற்காலச் சந்ததியினருக்கு ஒரு நிலைத்த பாதுகாப்பைத் தேடித்தர, பலமான மாறுதல் தேவை!

இதைத்தான் அண்ணா அவர்கள் 'ஐம்பதாண்டுப் பணி காத்துக் கிடக்கிறது' என்றார்கள்.

அந்தப் பெரும் பணிக்காக அஞ்சுக மைந்தன் பின் அணி திரளத் தமிழ்ச் சமுதாயம் ஒன்றுபட வேண்டும்,

தூய அப்பணக்குக் குறுக்கீடுகள் இல்லாமலே இருக்காது—அப்படிப்பட்ட வேளைகளில்...கடந்த காலங்களில், சோதனை மிக்க நேரங்களில், கலைஞரை நோக்கி வந்த கடுமை மிக்க எதிர்ப்புக்களை—அவற்றால் அவர் அடைந்த அல்லல்களைக் கூறி—

அவரது தொண்டாற்றலின் மகத்துவம் குலையாமல் காடபோம்!

அவரது தியாகத்தின் பெருமையை உலகம் உணர வைப்போம்!!

அண்ணா வழியில்
அடராது உழைப்போம்!
கலைஞர் தலைமையைக்
கண்போல் காப்போம்'!

நாடும்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் ஒலித்துக் கொண்டிருந்தது

ஆனால் நடிக முதல்வர் போராட்டத்திற்குப் பயந்து கொண்டு வேறுமாநிலத்திற்கு ஓடிவிட்டவர். 'கோர்வாவில் படப்பிடிப்பில் கலந்துகொள்ளவில்லை. தார்வாரிலேதான் என்கிறார், அதுகூட காதல் காட்சி அல்ல'' என்று அடித்துப் பேசுகிறார்.

பத்மினி பிக்சர்ஸ் எடுத்த 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் காதல் காட்சியில் ஜெயலலிதாவோடு நடிக்கிறார். இதுதான் உண்மை. மன்னாதி மன்னருக்கு மறந்து போய் விட்டதா? அரச கட்டளை அடங்கி நடக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இன்று நின்று கொண்டிருக்கும் அவருக்கு கவலைகளின் காரணமாக அந்த மன்மத வரிகள் இன்று மறந்து போயிருக்கலாம்

நாணமோ இன்னும் -

நாணமோ—இந்த
ஜாடை நாடகமென்ன –
அந்தப்
பார்வை கூறுவதென்ன?''

என்ற அந்தப் பல்லவி, இன்னும் உங்கள் நினைவை நெருடவில்லையா?

''ஜாடை நாடகமென்ன?' என்று நீங்கள் கதாநாயகியைப் பார்த்துக் கேட்ட கேள்வியை, இப்போது கதாநாயகனே! உங்களைப் பார்த்து கேட்கிறோம்

பொய் சொல்லிச் சொல்லியே புகழ் ஈட்ட நினைக்கும் உங்கள் ஜாடை நாடகமென்ன?''

எத்தனை நாளைக்கு இந்த ஏமாற்று வித்தை? ஒருநாள் உங்கள் நாடக ஒப்பனை கலையத்தான் போகிறது. உங்களின் உண்மைச் சொருபம் காண நாடு. தன் கண்களை அகல திறந்து வைத்துக் காத்திருக்கிறது!

★

★★★★0★★★

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 26-00

ஆறுமாத சந்தா ரூ. 13-00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★★★0★★★★

நாடும் நாடகமும்

பித்தம் தலைக்கேறி விட்டால் மனிதன் பிதற்றுவான் என்பார்கள். எம். ஜி. ஆரைப் பொறுத்த வரை அது முற்றிலும் உண்மையாகவே இருக்கிறது.

அண்மையில் சேலத்தில் பேசியிருக்கிறார் முதல்வர் எம். ஜி. ஆர். நிதானத்தை இழந்து நிலை தடுமாறி புலம்பியிருக்கிறார்.

'இந்தி பற்றி இப்போது கருணாநிதி அடிக்கடி பேசுகிறார், எழுதுகிறார்'' இப்படியும் அலறியிருக்கிறார். எம். ஜி. ஆர்.

இந்தி பற்றி அடிக்கடி கலைஞர் பேசித் தீர வேண்டிய நிர்ப்பந்தத்தை இந்தியாவை ஆளுவோர் உருவாக்கி விடுகிறார்கள். இது தெரியவில்லையோ எம் ஜி. ஆருக்கு?

பிரதமர் மொரார்ஜி அண்மையில் பேசுகின்றபோது, நாட்டில் உள்ள பதினான்கு தேசிய மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்குவது ஆகாத ஒன்று. ஒரே மொழியை மட்டுமே ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ள முடியும்! அதுவும் இந்தி மொழியை மட்டுமே ஆட்சி மொழியாக ஏற்க முடியும் என்று அழுத்தம் திருத்தமாக ஐயப்பாடு இன்றி விளக்கம் அளித்திருக்கிறார்.

செங்கோட்டையிலே கோலோச்சுகின்ற சர்வாதிகாரிகள் தங்களது ஆதிக்க மனப்பான்மையை ஆட்சி மொழிப் பிரச்சினையில் அடிக்கடி காட்டி வருகின்ற அபாயத்தை, அச்சத்தை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே செங்கோல் செலுத்துகின்றவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். காரணம் அதிகார போதை அவர்கள் கண்களை மறைக்கலாம்

டில்லியிலே எரிகின்ற சிவப்பு விளக்கைக் கலைஞர் காண்கிறார். இந்தி ஆதிக்க அபாயத்தை உணர்கிறார். ஆகவே தமிழர்கள் அறிந்து கொள்ள அபாயச் சங்கை ஊதுகிறார்,

முதல்வர் எம். ஜி. ஆர். மொரார்ஜியின் அதிகாரத்தை எண்ணுகிறார். அஞ்சி நடுங்குகிறார்; அடங்கிப் போகிறார்,

இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்தால் ஆட்சி எங்கு பறிபோய் விடுமோ என்று அடங்கி, ஒடுங்கி பதுங்கிக் கொள்கிறார்,

இந்தித் திணிப்பு இல்லை—மொரார்ஜியே கூறி விட்டார் நம்புவோம் என்று சொல்லி விட்டார் அந்தச் சுத்த வீரர். தன்னையே ஏமாற்றிக் கொள்வது பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் நாட்டுமக்களை ஏமாற்ற நாடகம் ஆடுகிறாரே என்பதுதான் நமக்கு ஏற்படுகின்ற கவலை.

இல்லையென்றால் கோவையில் கூடிய இந்தித் திணிப்பு மாணவர் எதிர்ப்பு மாநாட்டையே தியாகிகள் வீர வணக்க நாள் மாநாடு என்று மாற்றிக் கொள்வாரா? இந்த ஸ்டண்ட் நடிகர் எம். ஜி. ஆர்.

உண்மை நிலையை மறைக்க உத்தமர் போல் நடிக்கிறார்.

முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றில் மறைக்க முடியாது என்பார்களே அதைப்போல் உண்மையை அவரால் ஒழித்து விட முடியவில்லை.

இந்தி ஆதிக்கத்தின் வேகத்தாலும் மொரார்ஜியின் வேகமான நடவடிக்கையாலும் மக்கள் மத்தியில் வெறுப்பும் வேதனையும் வெளிக் கிளம்பும். அதனால் தம் ஆட்சி எங்கே கவிழ்ந்து விடுமோ என்று அவதிப்படுகிறார்.

''வீடு பற்றி எரிகிறது என்றால் எல்லோரும் ஓடிவந்து நெருப்பை அணைக்க வேண்டும். அதை விட்டு விட்டு எதை எதையோ கருணாநிதி பேசுகிறார், எழுதுகிறார் என்று ஏக்கப்படுகிறார். மாடி வீட்டு ஏழை எம். ஜி. ஆருக்கு வழக்கமாகி விட்டது.

தமிழை, தமிழர்களை அடிமைப்படுத்த, இரண்டாந்தரக் குடிமக்களாக்க உத்தரப்பிரதேசத்துக்காரர்கள் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகி-

சா. க.

-றார்கள் அதற்கு ஒத்து ஊதுகிறார்கள் வடபுலத்துக் காரர்கள்,

தமிழர்க்கு ஏற்படுகின்ற இன்னலைத் தடுத்து நிறுத்த தமிழினத் தலைவர் கலைஞர் இந்தி பற்றி இப்போது அடிக்கடி பேசி வருகிறார். உண்மைதான். தமிழர்களின் நலனைப்பற்றிக்கலைஞர் தானே கவலை கொள்ள வேண்டியிருக்கிறது. வேறு யார் இருக்கிறார்கள் இந்தத் தமிழ் மண்ணில்?

ஆட்சிமொழிப் பிரச்சினையால் நாடே கொந்தளிப்பில் இருக்கிறது. இதைத்தான் எம். ஜி. ஆர். உணர்ந்துவிட்டவர்போல் வேஷம்போடுகிறார்.

வீடு தீப்பற்றி எரிகிறது. எல்லோரும் ஓடிவந்து நெருப்பை அணைக்க வேண்டும் என்று நெடிய குரல் கொடுக்கிறார்.

தமிழகத்தின் தலைமகன் கலைஞர் தீப்பற்றி எரிகின்ற வீட்டின் மீது தண்ணீர் ஊற்றி அணைக்க முனைகிறார். ஆனால் நெருப்பை அணைக்க வேண்டிய முதல்வரோ அழைப்பை மட்டும் விட்டு விட்டு அமைதி ஆகி விடுகிறார்.

தமிழ் மொழியைப்பற்றி தமிழர் வாழ்வுபற்றி தமிழ் நாடுபற்றி சிந்திப்பதும் செயலாற்றுவதும் தவிர கலைஞர் வேறு எதைப்பற்றி எழுதுகிறார் எதைப்பற்றிப் பேசுகிறார்?

இருட்டிலே இருக்கிற எம். ஜி. ஆருக்கு இதைப்பற்றியெல்லாம் எங்கே தெரியப் போகிறது!

இந்தி மொழி ஆதிக்கம் அண்ணா காலத்தில் இருந்த நிலையைவிட இன்னும் அதிகமாகி விட்டது. இதுதான் உண்மை, இதை ஆட்சியை அலங்கரிப்போர் திரை போட்டு மறைத்துப் பயனில்லை.

ஆகவேதான் கலைஞர் அண்ணா வழியைப் பின்பற்றுகிறார் குடியரசு நாளில் வேதனையை வெளிப்படுத்தினார்; துக்கத்தை ஆளாள்வோருக்கும் உலகுக்கும் தெரியப்படுத்தினார். கருஞ்சட்டை அணிந்து கருங்கொடி ஏந்தி இலட்சக் கணக்கான தொண்டர்கள் அணிவகுத்து தமிழகத்தின் நகரங்களிலும், பட்டிதொட்டிகளிலும் ஊர்வலம் நடத்திக் காட்டினர்.

கலைஞரின் தலைமையே இந்தியின் ஆதிக்கத்தைத் தகர்க்க முடியும் என்று தமிழர்கள் நம்புகிறார்கள்,

1965 இல் மொழிப்புரட்சி மூண்டபோது மாணவர்களே பெரும் பங்கு வகித்தார்கள், என்பது உண்மைதான் ஆனாலும் தி. மு. கழகமே அந்த மொழிப் புரட்சியில் முக்கிய பங்கு வகித்தது என்பதை நாட்டு மக்கள் இதற்குள் மறந்து விடமாட்டார்.

இந்த மொழிப் புரட்சியில் பங்கு கொண்ட மாணவர்களை அன்றைய தினம் ஆட்சியிலிருந்த பக்தவத்சலம் இதயத்தைக் கீழே இறக்கி வைத்து விட்டு குருவிகளைச் சுட்டுத் தள்ளுவதைப்போல சுட்டுத் தள்ளினார்.

இன்றைய தினம் எம். ஜி. ஆர். கேட்கிறார், மாணவர்கள் சுடப்பட்டதற்கு யார் காரணம்? கருணாநிதி நெஞ்சில் கை வைத்துச் சொல்லட்டும் என்று. முன்னாள் முதல்வர் பக்தவத்சலம்தான் அன்றைய துப்பாக்கிப் பிரயோகத்துக் காரணம். இது ஊரறிந்த உண்மையாயிற்றே!

மக்களை திசை திருப்பும் திருப்பணியில் ஈடுபடும் ஈனபுத்தி ஏனோ இந்த ஏழைப்பங்காளன் எம். ஜி. ஆருக்கு?

அதிலும் போராட்டம் நடத்தும் கட்சியின் தலைவரே போராட்டத்தில் தலைமை தாங்கி ஈடுபட்டால்தான் அவரைத் தகுதிமிக்க தலைவராக நாடு ஏற்றுக்கொள்ளும்; நானிலம் போற்றும்.

1965-இல் நடந்தமொழிப் புரட்சியில்மாணவர்கள்பெரும் பங்கு வகித்தார்கள் என்றாலும் அன்றைய கொடுங்கோல் ஆட்சி கலைஞர்தான் மொழிப் புரட்சியைத்தூண்டினார் என்று குற்றஞ்சாட்டி அவரைக் கைது செய்தது.

பாளையங்கோட்டைத் தனிமைக்கொட்டடியில் அடைத்து வைத்துக் கொடுமைப் படுத்தியது. கொடும் பசியைத் தீர்த்துக் கொண்டது.

''எம் தம்பி கருணாநிதி அடைபட்டு இருக்கும் பாளைச் சிறையே எனக்குப் புனிதத் தலம்'' என்று பெருமிதத்தோடு கூறினாரே பேரறிஞர் அண்ணா அந்த அண்ணனை அவமதிக்கும் போக்கிலே ''கருணாநிதி சிறைக்கு அஞ்சும் கோழை'' என்று இந்த கோவா வீரர் எம். ஜி. ஆர். கொக்கரிக்கிறார்.

அன்றைய தினம் அண்ணாவின் ஆணையை ஏற்று தமிழர்கள் எங்கும் தங்கள் இல்லங்களில் கறுப்புக்கொடிகளை ஏற்றிப்பறக்க விட்டனர்.

கழகத்தின் தலைவர்கள் வீடுகளில் எல்லாம் கறுப்புக் கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தன. ஆனால்கழகத்தின் முன்னோடிகளில் ஒருவர் வீட்டில் மட்டும் அந்தக் கறுப்புக்கொடியைக் காண முடியவில்லை.

அந்த முன்னோடி வேறு யாருமல்ல; வீராதி வீரர் சூராதி சூரர், அகில உலகதீரர் எம். ஜி. ஆர். தான்,

கறுப்புக்கொடியைத்தனது வீட்டில் ஏற்றாததுமட்டுமல்ல; கோவாவை நோக்கி ஓடிவிட்டார்.

தமிழகத்தில் காட்டு தர்பார் ஆட்சி நடத்திய காங்கிரசார் மாணவச் செல்வங்கள் நூற்றுக்கணக்கானவர்களை சுட்டுத் தள்ளினர். அதன்விளைவாக தமிழர்கள் இல்லங்களில் அழுகுரல் ஒலித்துக்கொண்டிருந்தது.

அப்போது சிறைக்கஞ்சா கிழச் சிங்கம் (?) எம். ஜி. ஆரின் ஆனந்தக்குரல் கோவா

[தொடர்ச்சி 11-ம் பக்கம்)

வரலாற்றில் பெயர்பொறிப்போம்!

(ஆடற்கோ)

விழிபோன்றமொழியிழந்தால் வாழ்வில்லை; கால்கள்
மிதிகல்லாய் நாமிருப்போம்; வடபுலத்தார் நம்மேல்
எழிலாக நடப்பார்கள்; எதிர்காலம் சூன்யம்
இந்நிலையை மாற்ற மறத் தமிழ்க் குலத்தீர் எழுக!
திறக்கின்ற சிறைக்கதவம் திறக்கட்டும்; எண்ணத்
தெளிவற்றோர் எத்தனைநாள் பூட்டிவைப்பார் நம்மை
இறக்கின்ற தலைவரினும் இன்முகத்தோ டேற்போம்;
இருந்தமிழைக் காத்துவர லாற்றில்பெயர் சேர்ப்போம்
வெங்கொடுமை அடக்குமுறை சட்டங்கள் யாவும்
வீணர்தம் கைக்கலங்கள். முனைமழுங்கிப் போகும்;
பொங்கியெழும் மொழிப்பற்றுப்
புதுப்புனல்வெள் ளத்தைப்
புவியெங்கும் அடக்கியதாய் வரலாறொன் றில்லை!
அமிழ்கின்ற பழங்குலமே அருந்தமிழர் வீட்டு
ஆண்மையின்னும் அழியவில்லை என்பதனைக் காட்டு!
தமிழ்மொழியைக் காப்பதலால் தலையாக வேலை
தமிழர்க்கொன் றில்லையெனத் தினமெழுக காலை!!

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி